JAFFNA ... LIBRARY
JAN 21 1946
VADDUKODDAI, CEYLON.

REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசீய வார வெளியீடு

மலர் 16 | சுன்னாகம்—பார்த்திப—தை எ, 20-1-'46—ஞாயிறு | இதழ் 25

ஒரு கஷ்டம் நீங்கியது!

மதுரையில்

தங்குவதற்கு வசதியான இடமும், ருசியான காப்பியும் சாப்பாடும் கிடைக்குமிடம்

ஸ்ரீ லங்கா பவன்

(இலங்கையரின் பரிபாலனத்தில்)

ஆரம்ப திகதி 23-1-46

நீர். 7, கீழ்ப்பட்டமார்தெரு, மதுரை

# அரசியலில் மறுமலர்ச்சி?

## முற்போக்கின் முக்கியம்

[கொழும்பு நிருபர் கடிதம்]

நாட்டுக்கு நலன்விளைக்கக்கூடிய நிரந்தர அரசியற் கட்சிகள் இலங்கையில் இன்னும் ஏற்படவில்லை யென்றே கூற வேண்டும். நாட்டின் அரசியல் பொருளாதார நிலைகளை நன்கு பரிசீலனை செய்து அவற்றை அடிப்படையாகக் கொண்ட திட்டங்கள் தான் இப்போது வேண்டப்படுவன. இவற்றைச் செய்துமுடிக்குஞ் சக்திவாய்ந்த கட்சிகளுக்குத்தான் இலங்கையில் இனி இடமுண்டு.

சாதி, சமயம் என்ற பாகுபாடுகளை மறந்து எல்லோரும் இலங்கைமக்கள் எனக்கருதி நாட்டின் விடுதலைக்கு உழைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. கொழும்பிலேயிருக்கும் அநேகர் இந்த உண்மையை உணர்ந்துகொண்டு வருகின்றனர். இந்நிலையில் இலங்கைத் தேசிய மகாசபையின் தலைவர் ஸ்ரீ. ஜோர்ஜ் ஈ. டி சில்வா மேற்படி மகாசபையின் இருபத்தாறுவது வருடாந்த விழாவிற்கூறிய வாசகம் இலங்கை மக்கள் ஒவ்வொருவருக்கும் பயன்படத்தக்கது. "சிங்களர், தமிழர் முஸ்லீங்கள் அனைவரும் எமது கலாசாரத்தையும் மொழிகளையும் பாதுகாப்போம். ஆனால் அனைவரும் எம்மை இலங்கை மக்களெனக் கருதுவோம். எனவே, சிங்களராகியநாங்கள் ஏனையோருக்கு முன்மாதிரியாகவிருத்தல் அவசியமாகின்றது. இது காரணமாக நாங்கள் எங்கள் வகுப்புவாதக் கட்சிகளை யெல்லாம் அறவே ஒழிக்கவேண்டும். அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸைக் கண்டிக்கும் நாங்கள், சிங்கள மகா சபையைக் கட்டித் தழுவிக்கொண்டிருத்தல் அதர்மமாகும்." இலங்கைத் தேசிய மகாசபைத் தலைவரின் இந்த வாக்கியங்கள் ஏனைய தலைவர்களுக்கும், அரசியற்கட்சிகளுக்கும் சிறந்த போதனையாகக் கொள்ளத்தக்கன.

பழைய சங்கதிகளைச் சதா நினைவூட்டிக்கொண்டிருப்பதில் இனிப் பயனில்லை. எதிர்காலத்தில் இத்தகைய தவறுதல்களைச் செய்யாது இலங்கை சுதந்திரம் பெறுவதற்கும் நாட்டிற் செல்வநிலை சீர்பெறுவதற்கும் வேண்டிய நல்லபணிகளில் ஈடுபட வேண்டும்.

### 'ரயில்வே'க்காரர் பயமுறுத்துகின்றனர்

அரசியற் கொந்தளிப்பு, வேலை நிறுத்தமெல்லாம் ஒரு புறமிருக்க இங்கு ரயில்வேயில் உத்தியோகம் பார்த்துவருபவர்கள் அரசாங்கத்தைப் பயமுறுத்திக்கொண்டிருக்கின்றனர். நாளொன்றுக்கு எட்டுமணித்தியாலங்களுக்கு அதிகமாக வேலைசெய்ய முடியாதெனவும் அப்படியில்லையென்று அதிகமாக வேலைசெய்வதாகில் அதற்கேற்ற கூடிய சம்பளங் கொடுக்கவேண்டுமெனவும் அவர்கள் அரசாங்கத்துக்குத் தெரிவித்திருக்கின்றனர்.

அடுத்தமாதம் 12-ந் திகதிக்கு முன்னர் அரசாங்கம் இவர்களின் குறைகளை விசாரித்து ஏற்ற ஒழுங்குகள் செய்யாதாகில் இந்த 'ரயில்வே'க்காரர்களெல்லாம்ஒரே முகமாக எட்டு மணித்தியாலத்துக்கு அதிகமாக வேலைசெய்ய மறுப்பார்கள்.

அதாவது எட்டுமணித்தியாலம் வேலை செய்துவிட்டு மேசைக்கு முன்னுற் சும்மாவிருப்பது. வீடு செல்லவேண்டிய நேரமும் முறையும் வந்தவுடன் ஒரு பேச்சுமூச்சுமில்லாமற் தொப்பியை எடுத்துப் போட்டுக்கொண்டு நேரே வீடு திரும்புவது. அவ்வளவுதான். இது நியாயமான ஒரு கோரிக்கை என்றே எல்லோரும் பேசிக்கொள்ளுகின்றனர். திரு. குணசிங்கா போன்றவர்கள் 'வால்' ஆட்டுவதற்கு இடங்கொடாமல் அரசாங்கம் 'ரயில்வே'க்காரரின் குறைகளைத் தீர்த்து வைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### புதிய புடவைக் கூப்பன்

ஏழு இலட்சத்துக்கு அதிகமான புடவைக் கூப்பன்கள் இங்கிலாந்திலிருந்து இங்குவந்திருக்கின்றன. இப்புதிய புத்தகங்கள் விநியோகஞ் செய்வதற்காகப் பல பாகங்களுக்கு அனுப்பப்படுகின்றன. புதிய கூப்பன்கள் அடுத்தமாதம் முதல் வாரத்தில் ஜனங்களுக்கு வழங்கப்படும். கடந்தவருடம் எவ்விதமாகக் கூப்பன்கள் கொடுக்கப்பட்டனவோ அதே முறைதான் இவ்வருடமுங் கையாளப்படும். புதியகூப்பன்கள் பெறுவதற்காக இப்போதுபழைய கூப்பன்களைத் திருப்பிக்கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படாது.

### தொகையான மாணவர்

கிறிஸ்மஸ்விடுதலைக்கு மூடப்பட்டிருந்த கல்லூரிகள் மீண்டும் ஆரம்பமாகிவிட்டன. அதிகமான பள்ளிக்கூடங்கள் பழமை போலத் தங்கள் சொந்தக்கட்டிடங்களுக்குத் திரும்பிவிட்டன. கல்லூரிகளுக்குச் சேரும் மாணவர்களின் தொகை மிதமிஞ்சிவிட்டது. இதனாற் சில பள்ளிக்கூடங்கள் புதிய பிள்ளைகளை அதிகமாகச் சேர்க்க முடியாது தவிக்கின்றன. ஆனந்தாக்கல்லூரியும் இப்போது சொந்தமான கட்டிடத்தில் நடைபெறுகின்றது. 450 புதிய மாணவர்கள் சேர விரும்பிய விடத்தும், போதிய இடமில்லாத படியால் ஆக 150 பிள்ளைகள்தான் இடம் பெற்றனர்.

### சிங்களத்துக்கு மதிப்பு

இந்தவருடம் ஜூன்மாதத்திலிருந்து இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சிங்கள விசேஷ வகுப்புகள் நடைபெறும். போதியளவு சிறந்த சிங்கள ஆசிரியர்கள் இப்போது இல்லாதபடியால் இக் குறையைத் தீர்ப்பதற்காகச் சிங்களத்தில் ஆராய்ச்சிவகுப்புகள் நடத்தவிருக்கின்றனர். இதிற் பயிற்சி பெற்றுத் தேறுபவர்களுக்குப் பல்கலைக்கழகம் 'டிப்ளோமா' பட்டங்கொடுக்கும். தேசியத் தேவையை முற்றுமுணர்ந்தே இத் திட்டம் பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

---

இராமநாதன் ஞாபகச் சொற்பொழிவு—4

# வகுப்புவாதம் தொலைய வழி

டொக்டர் ஐவர் ஜென்னிங்ஸ்

மந்திரிமாரின் அரசியற்றிட்டத்தை மிக நுணுக்கமாக அநேகர் ஆராய்ந்து நோக்கவில்லை. பகிரங்கமாக விவாதித்து நோக்காத சில அரிய விஷயங்கள் அதிலுள. வகுப்புவாதப் பிரதிநிதித்துவம் அதில் முற்றாக விலக்கப்படுகின்றது. இது இருப்பின், வகுப்புவாதமும் தொலையாது நிலைத்து நிற்கும். வகுப்புவாதம் தொழிற்படாதிருக்க இரண்டு பிரதம ஸ்தாபனங்கள் ஏற்படவிருக்கின்றன. முதலாவது உயர்ந்த பகிரங்க உத்தியோகத்தரை நியமிக்கும் சபை. இரண்டாவது நீதிப்பகுதி உத்தியோகத்தரை நியமிக்கும் சபை. உத்தியோகத்தர் நியமிக்கும் விஷயத்தில் வகுப்புத்துவேஷம் முற்றாக ஒதுக்கப்படப் போகின்றது. உத்தியோகத்தரை வேலையில் உயர்த்தல், இடம்மாற்றல், உத்தியோகத்தினின்று நீக்கல் ஆகிய விஷயங்களைக் கையாளவும் மேற்படியான முறையில் சபை ஏற்பட வேண்டுமெனச் ஸோல்பறி விசாரணைச் சபையினர் கூறியுள்ளார். அரசியல் வியவகாரங்கள் அரசாங்க உத்தியோகத்தினரைப் பாதிக்கமாட்டா. தம்முடைய வகுப்பினர்க்கு விரோதமான சட்டங்கட்கல்ல, அரசாங்கத்தில் வகுப்புத்துவேஷம் கையாளப்படுவதற்கே தாம் அஞ்சுவதாகச் சிறுபான்மைக் கட்சியினர் கூறுகின்றனர். டொனமூர் திட்டப்படி ஏற்பட்ட நிர்வாகசபை அரசியல் முறை இதை நீக்குவதற்கு மாறாக, இதை அதிகரிக்கச் செய்தது. 1944-ம் வருடத்தில் இலங்கையிலுள்ள அரசாங்கப் பகுதிகள் இங்கிலாந்திலுள்ள அரசியற் பகுதிகளிலும் மும்மடங்கு அதிகமாக உள்ளன. இங்கிலாந்தில் மந்திரிமார், நிர்வாக உத்தியோகத்தர் நியமனத்தில் தலையிடுவதில்லை. இலங்கையிலோ அதற்குமாறாகச் சிறிய உத்தியோகத்தரை நியமிப்பதிலும் மந்திரிமார் சிற்சிலபோது தலையிட்டுள்ளார். புதிய திட்டப்படி அரசாங்கப்பகுதிகள் பத்தாகக் குறைக்கப்படும். இப்பகுதிகளின் தலைவர்கள் உத்தியோகத்தை நடத்திச் செல்வரேயன்றி அரசியல் வியவகாரங்களிலே தலையிடாதிருப்பர். அரசியல் விஷயங்களைச் செய்யுங்கால் அவைகளைப்பற்றிய முடிவுகளைக்காணப் பிரதம உத்தியோகத்தரே அதிகாரம் பெறுவர். அரசாங்கசபை அங்கத்தவர் இதிலே தலையிட வேண்டியதாகாது. ஆனால் அரசாங்கசபை அங்கத்தினர் கைக்கொள்ளவேண்டிய முறைகளைச் சபையில் விவாதித்து முடிவுசெய்யும் உரிமை உடையர். ஆனால் நாளாந்தர அரசியல் நடைமுறையில் தலையிட இடமிராது.

### பிரதிநிதித்துவம்

புதிய அரசியற்றிட்டப்படி வகுப்புவாதமுறையில் அங்கத்துவம் மறுக்கப்பட்டது. ஆனால் சிறுபான்மை வகுப்பினர் அதிக பிரதிநிதிகளைத் தெரிவு செய்யக் கூடியதாகப் பிரதிநிதித்துவம் [illegible] தொகைக்கு [illegible] அக்கு ஏற்ப அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. ஒருசாகியத்தவரின் ஒற்றுமையான தொழில் நோக்கியும் பிரதிநிதித்துவம் வழங்கக் கூடும். சிற்சில தேர்தற் பகுதிகளில் ஒன்றுக்குமேலாக இரண்டு மூன்று அங்கத்தவர் தெரியவும் ஸோல்பெரி விசாரணைச் சபையினர் இடமளித்துள்ளார்கள். இதனாற் சிறுபான்மையருக்கு நன்மை வருமா என்பது கேள்வியாகும். இங்கிலாந்தில் இவ்வித முறையால் நன்மையடைந்தவர் பெரும்பான்மைக் கட்சியினரேயன்றிச் சிறுபான்மைக் கட்சியினரல்லர். இலங்கையின் நிலைமை வேறாகையால் பெரும்பான்மையரில் பிளவினை யுண்டாக்கக் கூடும். மாகாணத்தின் விஸ்தீரணத்துக்கு ஏற்ப பிரதிநிதித்துவம் அதிகரிக்கப் படுகின்றமையால் அதிகம் முன்னேற்றமடையாத விடங்களில் வசிப்போரும் விசேஷமாகத் தங்கள் குறைகளை எடுத்துக் கூற அங்கத்தவரைத் தெரியும் உரிமையைப் பெறுகின்றனர். இவ்விதமாகப் பிரதிநிதித்துவம் ஏற்படுவதால் வட மாகாணத்தின் பிரதிநிதிகள் தொகை ஐந்திலிருந்து ஒன்பதாக அதிகரிக்கக், கீழ்மாகாணப் பிரதிநிதிகள் தொகை நாலிலிருந்து ஏழுபோக அதிகரிக்கின்றது. தென்னிலங்கையில் கடற்கரை யடுத்த மாகாணங்களில் அங்கத்தவர் தொகை 36-ல் இருந்து 42 ஆகின்றது. கண்டிப்பகுதியின் பிரதிநிதிகள் தொகை 26-ல் இருந்து 37 ஆக அதிகரிக்கிறது. கல்வி வசதிகள் தற்போது இருப்பபோலிருந்தவரின் அநேக அங்கத்தவர் தமிழர் வசிக்கும் வட, கீழ் மாகாணங்களிலிருந்தும் தென்னிலங்கைக் கடற்கரையடுத்த மாகாணங்களிலிருந்தும் தெரியப்படுவர். இவ்வாறு தெரியப்படுவோர் சமுதாய சீர்திருத்தம், பொருளாதார நிலைமையை நோக்கி ஸ்தானம் பெறுவரேயன்றி வகுப்புவாதத்தை மேற்கொண்டு அங்கத்துவத்தை நாடவியலாது. இதற்குமாறாக வகுப்புவாதம் தலைப்படினும் கல்வி விருத்தியடைந்து பாமரர்கட்கிடையிலுள்ள அறியாமை நீங்கின் அதற்கு இடமின்றாய்விடும்.

### பெரும்பான்மையினர்க்கிடையிற் பிரிவு

வகுப்புவாதம் நிலைபெறுமா அல்லவா வென்பது பொதுசனங்களின் மனநிலையைப் பொறுத்தது. அரசியற்றிட்ட அமைப்பினை முற்றாகச் சார்ந்ததல்ல. அரசியற் றிட்டத்தை வகுக்குங்கால் இயன்றவளவில்சிறுபான்மையரைத் திருப்தி செய்ய மந்திரி சபையினர் எத்தனஞ் செய்துள்ளார். கௌரவ சேனநாயகா அவர்களும் அரசாங்க சபையிற் பேசும்போது மிகவும் விட்டுக்கொடுத்தே பேசியுள்ளார். வகுப்புவாதத்தை முற்றாக ஒழிக்க வேண்டுமென்பதே அவரின் மனவிருப்பமாகும். புதிய அரசியற்றிட்டத்தினால் வகுப்புவாதமானது நீங்கித் தேசியவாதம் தலைப்பட வேண்டுமென்பது இதன் நோக்கம்.

எப்பொழுதும் பல்வேறு வகுப்பினரும் வகுப்புவாத நோக்குடன் தமது தெரிவு நிலைமையை உபயோகிப்பாரென்பது சிலருடைய அபிப்பிராயமாகும். இது முற்றாக உண்மையல்ல. எப்பொழுதும் எல்லா விஷயங்களிலும் சிங்களவர் சேர்ந்துகொள்வாரென்பதும் சம்பவிக்கக் கூடிய காரியமன்று. ஆனாற் சிற்சில விஷயங்களிற் சிங்களர் ஒருங்கு சேர்ந்துகொள்ளக்கூடும். சிங்களவர்க்கிடையிலுள்ள அரசியற் போக்குகளை நோக்கின் இதனுண்மை விளங்கும். சிங்கள நாடுகளிலுள்ள தேர்தற் பகுதிகளில் (Electorate) தீவிரவாதிகளின் கட்சி மிகவும் பெலமடைந்திருக்கக் காணலாம். பிரதானமாக நகரங்களிலும் தோட்டப் பகுதிகளிலும் இக் கட்சியினரின் ஆதிக்கம் மிகவுங் கூடியதாகும். இப்போதுள மந்திரி சபையிலுள்ளார் எவராவது முதன் மந்திரி ஸ்தானத்தைப் பெறினும் அவரை எதிர்க்கும் சிங்களக் கட்சியினர் நிச்சயமாகத் தோற்றுவர்.

கிராமங்களில் வசிப்போர் எவ்விதமாகத் தமது வாக்குரிமையை அளிப்பாரெனச் சொல்ல வியலாது. ஆனால் இப்போதைய நிலையில் தீவிரவாதிகட்கே எங்கும் செல்மதியாக விருப்பது யாவரும் அறிந்த உண்மை. ஆகவே ஒரு விஷயம்உண்மையாகநம்பியிருக்கலாம். சிங்களவரை முற்றாக நம்பி, எந்தச் சிங்களத் தலைவரும் பெரும்பான்மையான அங்கத்தவரின் ஆதரவை அடுத்துவரவிருக்கும் இலங்கைத் தேசாளுமன்றத்திற் பெறவியலாது. சிறுபான்மையரின் ஆதரவைப் பெற்றே இலங்கைத் தேசாளுமன்றத்தின் முதன்மந்திரியாக எவரும் வரவேண்டியதாகும். பொருளாதார நிலையை ஆதாரமாகக் கொண்ட கட்சியினரே எல்லா வகுப்பினரின் ஆதரவையும் பெறுவர். பொருளாதார விஷயத்தை அடிப்படையாகக்கொண்ட ஒற்றுமை நிலைபெறும். வகுப்பு நன்மையை மாத்திரம் நோக்கின் ஒற்றுமைக்கு இடமில்லை.

சிறுபான்மைக் கட்சியினர் ஒவ்வொருவரையும் திருப்தி செய்து அவர்களிடமிருந்து பெறும் ஆதரவு என்றும் நிச்சயமானதல்ல. சிற்சிலபோது தமிழர் அதிருப்தியடைந்து தேசாளுமன்றத்திலிருந்து வெளிக் கிளம்புவர். அப்பொழுது மகமதியர், பறங்கியர், இந்தியரென்போரின் ஆதரவைச் சிங்களவர்பெறவேண்டிவரும் முஸ்லீங்கள் அல்லது பறங்கியர் வெளியேறின் அவர்கள் தமிழரின் ஆதரவைப் பெற வேண்டியதாகும். இப்படியாக விருப்பின் அரசாங்கம் நிலைபெறாது தளர்ச்சியடையும். யுத்தத்துக்கு முன் பிரான்ஸ் தேசத்தில் நிலைபெற்ற அரசாங்கமும் அத்தன்மையானது. ஒவ்வொரு வகுப்பினரும் தம்மளவில் ஒற்றுமையாயிருந்தால் பெருநன்மையடையலாமெனச் சிலர் கூறுகின்றனர். சிறுபான்மை வகுப்பினர் தம்முள் ஒற்றுமையடைந்து எதிர்ப்பின் சிங்களராகிய பெரும்பான்மை வகுப்பினரும் தம்முள்ஒற்றுமையடைவாரே.

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

த. தம்பித்துரை

பிரசண்ட விகடன்

ஸோல் ஏஜென்ட்

சுத்தானந்த பாரதியார் வெளியீடு, சோதி நிலைய வெளியீடு, கோதைநாயகி அம்மாள் எழுதிய நூல்கள், கதைப்புத்தகங்கள், நாவல்கள், சினிமாப்பாட்டுப் புத்தகங்கள் புதினப் பத்திரிகைகள்முதலியன எம்மிடம் கிடைக்கும்.

தலைமை நிலையம்:
கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

கிளை:
பெரியகடை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்ண பரம்பரை

● கொண்டோடி ●

● நிதிக் காரியதரிசி குணதிலகா, ஒரு ஆசிரியராகத்தான் தமது வாழ்க்கையை ஆரம்பித்தாராம்.

☼ அப்படி ஆரம்பித்து, இப்படி முன்னுக்கு வந்துவிட்டாராம்.

☼ முன்னுக்கு வந்ததும், பழைய தொழிலை மறந்துவிடவில்லையாம்.

☼ லண்டனுக்குப் புறப்படுவதற்குச் சிறிது நேரத்துக்கு முன்னர், அரைமணித்தியாலம் உபாத்தி வேலை பார்த்தாராம்.

☼ தமது அந்தரங்கக் காரியதரிசியின் 3½ வயதுக் குழந்தைக்கு அரிச்சுவடி சொல்லிவைத்தாராம்.

☼ நெடுங்கணக்கும், ஒன்றிலிருந்து பத்துவரை எண்ணும் கற்பித்தாராம்,

☼ எல்லாம் அரைமணித்தியாலத்திற்குள்ளேதான்!

☼ பயல் வெகு கெதியாக, எல்லாவற்றையும் கிரகித்துக்கொண்டானும்.

☼ ஒலிவருக்கு, பயலின் திறமையைப் பார்த்து, ஒரே ஆச்சரியமாம்.

☼ ஒலிவரின் திறமையைப் பார்த்து, பயலுக்குப் பிரமிப்புத்தானும்!

● டொக்டர் கன்னங்கராவுக்கும் பிரமிப்பு இன்னும் நீங்கவில்லையாம்.

☼ 500 ரூபாவுக்கு மேல் சம்பளம்வாங்கும் ஆசிரியர்மாரைப் பார்த்து அவர் வாயைத் திறக்கிருராம்.

☼ 'பைபி'ளைப் படித்து, நன்கொடை பெற்றதைப்பற்றி, எத்தனைநாளைக்குத்தான் புழுகப் போகிருரோ?

☼ இவர் தன்னைத்தானே புழுகிக்கொள்ள, கிறிஸ்தவர்களுக்கும் சந்தோஷமாயிருக்குமாம்.

☼ 'பைபிள்' கிறிஸ்தவர்களது தானே!

☼ அதைப் படித்து கன்னங்கரா முன்னுக்கு வந்தாரென்ருல், அதிலே கிறிஸ்தவர்கள் பெருமையடைய இடமில்லையா?

● ஒலிவரைப் போலவே கன்னங்கராவும் தமதுவாழ்க்கையை ஒரு ஆசிரியராகத்தான் ஆரம்பித்தாராம்.

☼ அப்போது மாசம் 40 ரூபாவுக்குத் தாம் செய்த வேலையில், நாலில் ஒன்றைச் செய்வதற்கு, இப்போதைய ஆசிரியர்கட்கு 500 ரூபா சம்பளம் கொடுக்கப்படுகிறதாம்.

☼ இது பொருமையாயிருக்கலாமோ?

☼ ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகப்படுத்தவேண்டியது அவசியமில்லை என்பதற்கு இது ஒரு போதிய காரணமாகாதோ?

☼ கன்னங்கரா முன்னுக்கு வந்ததெல்லாம் தமது சொந்தக் கெட்டித்தனத்திளுலேதானும்.

☼ அவரோடு படித்த பல்லாயிரக்கணக்காஞேர் இப்போது பிச்சை எடுக்கிருர்களாம்.

● இனிமேல் கல்வி விஷயத்தில், எல்லாருக்கும் சமமான சந்தர்ப்பம் அளிக்கப்படுமாம்.

☼ ஒரு, 'மரஞ்சீவி'யின் மகன் வருங்காலத்தில் ஒரு கல்வி மந்திரியாக வர முடியுமாம்.

☼ அது தனது சொந்தத்திறமையினுல்

☼ ஆனல் ஒருகுருடனே, சொத்தியோ கூட இந்த ாதிரி உயர்ந்த பதவிக்கு வரலாந்தானே!

☼ அது, கைலஞ்சத் திறமையினுலாம்.

☼ அவருடைய கல்விக் காரியாலயத்திலே யிருந்துதான் 'கைலஞ்சம்' என்ற வார்த்தையே உற்பத்தியானதாகப் பேசிக்கொள்கிருர்களே!

☼ இதனை அடியோடு அழித்து விடுவதற்குக் கன்னங்கரா முயற்சி செய்வாராக.

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.


## வாங்கிப் படியுங்கள்!

| | ரூ. | ச. |
|---|---|---|
| எரி நட்சத்திரம் | 4 | 50 |
| உல்லாசவேலை — எஸ். வி. வி. | 3 | 50 |
| தேவி சௌதுராணி | 2 | 00 |
| நீலமணி - கி. வா. ஜ. | 2 | 00 |
| சந்தனக் காவடி | 2 | 00 |
| வஸந்தன்—எஸ்.வி.வி. | 2 | 00 |
| புதுமாட்டுப் பெண் | 1 | 13 |
| மீராபாய் வசனம் | 1 | 00 |
| கங்கை கொண்ட சோழன் | 1 | 50 |
| பல்லவ மகேந்திர வர்மன் | 1 | 50 |
| அன்னை கஸ்தூரி | | 75 |
| சிசுபாலனம்-ராஜாஜி | | 50 |
| மீராபாய்-நாடகம் | 1 | 00 |
| மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதய்யர் | 1 | 25 |
| இளமைப் பருவம் —மகாகவி. டாகுர் | 1 | 50 |
| கல்லின் வேட்கை — டாகுர் | 2 | 00 |
| வேலும் வில்லும் | 1 | 00 |
| கம்பன் மலர் | 2 | 00 |
| பாராயணத் திருப்புகழ் | | 25 |
| க்ரட்டூர் ராமு | 2 | 00 |
| இருமலர்கள் — பிரேம்சந்த் | 1 | 00 |
| முருகன் மதுரகீர்த்தனை | 3 | 00 |
| அமூல்யன் — சரத்சந்திரர் | 1 | 25 |
| வாடாவிளக்கு | 2 | 00 |
| ஸம்பத் — எஸ்.வி.வி. | 4 | 00 |
| சதுரங்கம் — மகாகவி டாகுர் | 1 | 75 |
| குழந்தை மனம் | 2 | 13 |
| இரு துருவங்கள் — காண்டேகர் | 5 | 50 |
| ரஜபுத்திர ஆதிக்கத்தின் அஸ்தமனம் —R. C. தத். I. C. S. | 4 | 50 |
| காதலர் உள்ளம் — எம். எஸ். சபரிராஜன் | 1 | 75 |
| காவேரி—ராய. சொ. | 1 | 00 |
| கதைக்கனிகள் — ஆண்டர்ஸன் | 1 | 00 |
| மிருணாலவதி — கே. எம். முன்ஷி | 3 | 00 |
| ஏழு நாடகங்கள் — க. நா. சு. | 2 | 00 |
| சுதந்திரத்தின் தத்துவங்கள்—மாக்ஸ்வினி | 2 | 00 |
| போதனைக்கருவிமொழி— ஸ்ரீமந் நா அகர்வால் | 1 | 00 |
| அடிமைத்தாய் — ஜோஷி | | 50 |
| பேஜிஸ்ட் ஜடாமுனி சொ. விருத்தாசலம் | 1 | 50 |
| புதுமைப்பித்தன்கதைகள் (ராப்பர்) | 3 | 25 |
| ஆங்கிலக் கவிதை மலர்கள் (ராப்பர்) | 1 | 50 |
| திரிபுரி காங்கிரஸ் — கா. கணேசன் | | 38 |
| ஸ்டாலின் - பி. வி. சுப்பிரமணியம் | 1 | 50 |
| மின்சாரத்தின் விந்தை பெ. நா. அப்புசாமி | 2 | 50 |
| பாதுகா பட்டாபிஷேகம் — தொ. மு. பா. | 1 | 00 |
| தபாற்செலவு: | | |
| தனிப்பிரதிக்கு — | | 25 |
| அடுத்த ஒவ்வொரு பிரதிக்கும் — | | 10 |

வி. பி. பியில் அனுப்பமுடியாது.

S.S. சண்முகநாதன் & சன்ஸ்
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்



## புகையிலைப் பயிர் செய்வோர்க்கு — ஓர் விசேஷ அறிவித்தல்

# புகையிலை

## கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனியார்

அநேக வருஷங்களாக எல்லாப் பயிர்களுக்கும் வேண்டிய பசளைவகைகளை விநியோகஞ் செய்பவர்களாக இருந்து வருகிருர்கள்

புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு அவசியமான பசளைகளைப்பற்றி விசேஷமாக அறிந்தவர்கள்

# C. C. C.

பிரத்தியேக புகையிலைப் பசளைக் கலப்புகளை உபயோகிப்பதாலேயே சிறந்த செழிப்பையும் மிக உயர்ந்த லாபத்தையும் — பெறமுடியும் —

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்

## கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனி லிமிற்றெட்

(பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டது)
(அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது)

**COLOMBO COMMERCIAL CO., LTD.**

Incorporated in Great Britain.
Liability of Members Ltd.

[2593]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரத்தாயின் இளமை எழில்

ஒரு வீரத்தாய் 'அவன் உண்ட முலையையே அறுத்து விடுவேன்' என உள்ளத்துடிப்புடன் சீற்றம் கொண்டெழுகின்றாள். முலையை ஏன் அறுக்க வேண்டும்; மகனையே பிடித்து அறுத்துவிடலாமே; இல்லை; இல்லை. முலையையே அறுக்கவேண்டும். வீரப்பால் ஊட்டி வீரனை மிளிரவேண்டுமென்றெண்ணிய அத் தாய் கேவலம போருக்குப் புறங்காட்டிய அவனை வன் அறுக்கப் போகின்றாள். தன்னையே நொந்து கொள்கின்றாள். வீரப்பால் ஊட்டிய தன் முலையையே அறுக்கத் துணிகின்றாள்.

ஒருநாட் காலை மப்பும் மந்தாரமுமாக இருந்த அடிவானத்தைக் கிழித்துக்கொண்டு எழுவதுபோல சூரியன் தன் ஒளிக் கதிர்களை வட்டமான ஆகாயத்தில் வாரி இறைத்துக் கொண்டிருந்தான். போரினுண்டான பேரிரைச்சல் உலகத்தைச் செவிடுபடுத்தியது. எங்கும் பூதூளி எழுந்தது. நாணொலிகள் நெடுந்தூரம் சென்றன. ஊழிக் காற்றென அம்புகள் முழங்கின. அடி, பிடி, விடு, கொல், செல் என்ற போர்வீரரின் ஆரவாரம் ஆகாயத்தில் எழுந்தது. குருதி ஆறு வெள்ளப் பெருக்கெடுத்தோடியது. பிணங்கள் அவ்வாற்றிடை மிதந்தன. வீரரின் பிணங்களும், யானை குதிரை முதலிய படைகளின் பிணங்களும் மலைபோல் ஒன்ருகக் குவிந்தன; ஒன்றை ஒன்று பிரிக்க முடியாதநிலையில் மயங்கிக் கிடந்தன.

ஒரு கிழத்தாய். நரைமயிர். உடம்பு பொலிவிழந்த நிலை. கண்கள் குழிவிழுந்து மங்கிப் போயிருந்தன முகத்தில் சுருக்கம் விழுந்து தசை தொங்கிக் கொண்டிருந்தது. முதுகில் கூன்விழுந்து தசை ஒட்டிப் போயிருந்தது. தோள்களிற் தசை வற்றியிருந்தது. இடுப்பு உலர்ந்த கட்டைபோன்றிருந்தது. முதுகெலும்பு தசையைக் கிழித்துக்கொண்டு புறப்படுந்தறுவாய. வ்வரிப்பானேன்? கிட்டத்தட்ட அறுபது வயதை எட்டிப்பிடித்து விட்டாள். தன்மகனை அருகழைத்து உச்சிமோந்து வீரமொழி பகர்ந்து 'போருக்குப் போய் வா' என அனுப்பிஞள். இளைஞன் கிழவியின் வீரமொழிகளை எல்லாம் ஏற்றுப் படைக்கலந் தாங்கிப் போர்முனை நோக்கிப்புறப்பட்டான். பாலசூரியனைப் பழிக்கும் அவ்விளைஞன் குமாரவேளை ஒத்திருந்தான். அமர்க்களத்துட் புகுந்தான்; பகைவர் படையிலுள்ள யானை குதிரைகளை வாள்வீசிக் கொன்ருன. வில் வளைத்தான்; கணை தொடுத்தான்; பகைவர்களை மண்ணோடு மண்ணாய் மடியச் செய்தான். இறுதியில் தன் மார்பில் அம்பொன்றையேற்ருன்; விழுப்புண் பட்டான். விழுந்தான்; மடிந்தான்; பாவம்! இளைஞன் பிணத்தொடு பிணமாஞன்.

மாலைநேரம்; சூரியன் போரின் உக்கிரந் தாங்கமாட்டாது மேற்குநோக்கி வெகு வேகமாக ஓடிக்கொண்டிருந்தான். போருக்குச் சென்ற இளைஞன்புறங்காட்டி ஓடிவிட்டான் என்ற ஊராரின் வசைமொழி கிழவியின் காதுக்கு எட்டியது. அவளுக்குண்டான மனப்புழுக்கத்துக்கு அளவேயில்லை; கோபமிகுதியாற் கூன் முதுகு நிமிர்ந்தது; கண்களினின்றும் கனற்பொறி தெறித்தது; முகஞ் சிவந்தது; பல்லைக் கடித்துக் கொண்டாள். "ஆ! அப்படியா. எனது வீர முலையிலிருந்து வீரப்பால் குடித்த என்மகனு போருக்குப் புறங்காட்டிஞன். போருக்குச் சென்று புறங்காட்டுவதிலும் அவன் போருக்கு அஞ்சி வீட்டுள் பதுங்கியிருக்கலாமே. வீரப் புதல்வனு என் புதல்வன்? இல்லை; இல்லை. ஆண்மை அற்ற பேடி; பேடி. நல்லது. அவன்மேற் பிழையில்லை. பிழை யார்மேல்? பிழை என் மேல். அவன் அடார்ந்த போருக்குத் தோற்றுஓடினன் என்ருல் அக்கொடியோன் பாலுண்ட என்முலையை உடனே அறுத்திடுவேன்'' எனக் கோப வெறி கொண்டாள். வாள் ஒன்றைக் கையிலேந்திஞள். அவ்வளவுதான். இப்போது அவள் வீரக் கிழவியன்று. வீர மங்கை. நேரே சென்ருள்; போர்க்களத்துட் புகுந்தாள்; பிணக்குவியலை நோக்கிஞள்; அழிந்துகிடக்கும் பிணங்கள் ஒவ்வொன்றையும் தன்

**செ. தனபாலசிங்கன்**

கைவாளிஞற்புரட்டிக்கொண்டே சென்ருள். சென்றவள், திடீரென ஆனந்த மிகுதியாற் குதித்தாள். என்னை? பகைவர் எறிந்த படை மார்பிற் பட்டு உடம்பு சிதைந்து வேருகித் தன் மகன் இறந்து கிடப்பதைக் கண்டாள், கண்களையே நம்பவில்லை. நேர்நின்று போராடிஞன் என உணர்ந்தாள். மகிழ்ச்சியால் உள்ளம் குழைந்தது. முகத்தில் வீரம் வழிந்தது. வாயிற் புன்னகைதவழ்ந்தது. மனம் அமைந்தாள். வீட்டுக்குத் திரும்பிஞள். தன் மகனை ஈன்ற ஞான்றிலும் பெருமகிழ்ச்சியுடையவள் ஆஞள். ஒரு பொருளைப் பெறுங்காலத்துண்டாகும இன்பத்திலும் அப்பொருளாலாம் பயன் நிறைவேறுங்காலத்துண்டாகும் இன்பமன்ருே பெரிது. வீரனைத் திகழ்ந்து தன் ஆண்மையை மறுவின்றி நிறுத்தான் எனக் கேட்கும்போதுண்டாகும் மகிழ்ச்சிக்கு அவ்வீரனைப் பெற்றபோதுண்டாகும் மகிழ்ச்சி எமமட்டு? முன்னையது மலை; பின்னையது அணு.

இத்தகைய எத்தனையோ வீரமகளிர்களை எல்லாம் பெண்ணுலகம் தன்னகத்துக்கொண்டு மிளிர்ந்தது; மிளிர்கின்றது; மிளிரப போகின்றது. கண்ணகி என்னும் கற்புடைத் தெய்வம் காற்சிலம்பொன்ருற் கொலையுற்ற காதலன் கோவலனுக்காகப் பாண்டி நாட்டை எரியூட்டவில்லையா? சமணசமயம் சார்ந்து அச்சமயத்திடை நின்ற கொழுநனையும் அவன்றன் குடிகளையும் மங்கையர்க்கரசி என்னும் மங்கையர் திலகம் சைவத்துக் கழைத்து அன்னுரை உய்விக்கவில்லையா? தாய்நாட்டுக்குச் சுதந்திரம்வேண்டி அமெரிக்கா முதலாம் வேற்று நாடுகளிற் பெருமேடைகளில் பண்டித விஜயலக்ஷ்மி சொற்போர் புரிந்து வரவில்லையா? இன்றைய உலகில் வருங்காலப்பெண்மையுலகப் புதுமைக் கோலம் திரையிடுகின்றது.

'வலிமைசேர்ப்பது தாய்முலைப்பாலடா
மானஞ்சேர்க்கு மனைவியின்வார்த்தைகள்
கலியழிப்பது பெண்களறமடா,

என்ற மகாகவி பாரதியின் பெருஞ்சொற் கொண்டல்களுக்கு எல்லாம் வருங்காலம் நல்விருந்தேந்தி நிற்கின்றது.

**செய்யுள்**

நரம்பெழுந்துலறிய நிரம்பாமென்றோ
ளுளரிமருங்கின் முதியோள் சிறுவன் [ள்
படையழிந்துமாறினன்என்றுபலர்கூற
மண்டமர்க்கு உடைந்தன ஞயின் உண்டவென்
முலையறுத்திடுவென்யானெனச்சினை இக்
கொண்டவாளொடுபடுபிணம்பெயராச்
செங்களந்துழவுவோள்சிதைந்துவேருபடுமகன் கிடக்கை காணூஉ, [கிய
ஈன்றஞான்றினும் பெரிதுவந்தனளே.

—புறநானூறு, உளஅ.

# கடிதக் காதலி!

(சாரதா)

கூடிதஉரு வாய்வளரும் கற்பனையின் சொற்பெருக்கே
வடிதமிழ்இன் பூச்சொரியும் மநதிரப்பூங் காவனமே
விடிபொழுதெல் லாம்நினைவு வேறுஇன்றி வேகமதாய்த்
துடிதுடிக்கும் என்மனது சூறையிலூர் கார்முகில்போல்!

சிரித்திடவும் சீறிடவும் சிந்தனையில் ஊறிடவும்
எரித்தெடுக்கும் வாழ்வனலுக்(கு) எட்டிநின்று ஆறிடவும்
வரித்தடங்கண் ஸ்ரீமுகி,உன் வார்த்தைசெயும் சாலமடி
நரிச்சிறுக்கீ உன்வரவெங் நாளுமுற நாவலிப்பேன்!

சயிக்கிளொலி கேட்பினெதோ தந்திதபால் வந்ததென்று
வியர்க்கவிழுந் தோடியுமுன் மேனிவண்ணம் காணலின்றிப்
பைத்தியமாய் நான்திருப்பப் பட்டதினம் பற்பலபார்;
ஜயக்கொடியே நித்தியமுன் தாபமெனைத் தாக்குதடீ!

முகத்திரையிட் டேவருமுன் முத்திரையைக் கண்டவுடன்
அகங்குழைந்து உள்ளழகை ஆய்ந்துணரும் ஆசையினல்
நகக்குறிவைத் தால்மவுன நாணநகை பூத்துநிற்பாய்;
இகத்தினிலே உன்னுறவுக்(கு) ஈடேதுவும் இல்லையடீ!

# ஞானோதயம்

**ஆனந்தராஜன்**

ஏழை ஒருவன், பணக்காரக் கன்னியின்மேல் காதல்கொள்கிருன். அவன் தன் காதல் தெய்வீகமென எண்ணி சந்தோஷமடைகிருன். விதியின் சூருவளி அவனைச் சும்மா விடவில்லை. தன் காதலை அவளறிய விடுகிருன். பணக் கர்வம்பிடித்த அப் பெண் அதைக் காலால் உதைத்துத் தள்ளுகிருள். இதையறிந்த ஏழையின், கற்பனைத் தடாகத்தில் எழுந்த சிற்றலைகளே இவை.

மலரினும் மெல்லிய காதல், வாழ்வின்விநோதம் என்றது என் பேதை மனம். நாளடைவில் இக்காதல் என் வாழ்வில் பெருந்தீயை மூட்டும் என்பது, என் மனக் கண்முன்னும் தோன்ற மறுத்தது. கற்பனை உலகில் காதலுடன் ஊடல் புரிந்து, அதனுடன் இன்பமாக வாழ்ந்த என்னை விதியின் கொடிய கரங்கள் சும்மாவிடவில்லை.

அன்று கையில் வளையல்கள் 'கிளீங்' 'கிளீங்' என்று சப்திக்க, வதனத்தில் மோகன முறுவல் தாண்டவமாட, அப்பொழுது கன்னத்தில் விழும் அழகிய குழிகள் காதலின் ஆழத்தை எனக்குக் காட்ட, என் மனக்கண்முன் தோன்றும் கன்னி இன்று எங்கோ சென்று விட்டாள். அவளின் 'ரீங்கார'த்தொனி இன்று என் காதுகளில் விழவில்லை. ஆடவன் காதலின் உறைவிடம், கன்னி காமனின் படைக்கலம் என்றது என் பித்துப் பிடித்த மனம். இவ்வெண்ணமெல்லாம் பரிதியைக்கண்டு மறையும் பனிநீர் போலாயிற்று. அன்ருெரு நாள் என் காதலின் சொரூபம் இன்று என்னவோ என் ஞான ஒளியின் சிகரமாகக் காட்சி அளிக்கிருள்.

என் அன்பெனும் நெய்யை எரியாத் தீபத்திற்குப் பலியிட்டேன். என் காதல் என்னும் நன்னீரை தழையாமரத்திற்கு வார்த்தேன். என்மனதில் எழுந்த காதற் கோயிலை இன்று அக் கன்னி உடைத்தெறிந்து விட்டாள். வனாந்திரத்தில் இருக்கும் ஒரு கோயிலாற் பெறும்பயன் யாது? அதேபோல் ஏழையின் மனதில் எழுந்த காதற் கோயிலும் பயனற்றதாய் விட்டது.

செல்வம், சுயநலம் கொண்ட பித்தர்களின் படைக்கலம். மானிடனின் இனிய வாழ்வில் எழும் ஞான சூரியனை மறைக்கும் காரிருள். கர்வம் என்னும் பெருநெருப்பை சுடர்விட்டெரியச் செய்யும் நெய். பஞ்சமாபாதகங்களாகிய கொடிய ஆயுதங்களைக் கூர்மையாக்கும் தீட்டுக்கல். இவைகளை இன்று என் மனம் உணரச் செய்தவள், என் அன்பை ஏளனஞ் செய்த அக்கன்னி.

என் மனமாகிய கூண்டில் அன்புடன் அடைத்து வைத்திருந்த என் காதற் குயில் இனறு கூண்டைவிட்டு எங்கோ சென்று விட்டது. அந்த அகங்காரக்குயில் சென்றவுடன் மனதில் ஒரு நித்திய சாந்தி. அச்சாந்தியில் இறைவனின் குரல் தெளிவாகக் கேட்கிறது. அவனின் அன்பொழுகும் தெய்வீககானம், உடைந்த என் மனத்தை ஒன்றுபடச் செய்தது. என் மனம் அவன் தெய்வீக கானம் வரும் திக்கை நோக்குகின்றது. அதோ வானவெளியில் அவனது வருகையைத் தெரிவிப்பதுபோல் ஆதவன் உதயமாகிருன். பட்சிகளின் தீங்கானம், நித்திராதேவியின் ஆலிங்கனத்தில் தங்களை மறந்து கிடக்கும் உயிர்களைத் தட்டியெழுப்புகின்றன. தன்னை மறந்து தூங்கிய என் ஆத்மாவையும் இவை தட்டியெழுப்பாமலென்ன?

ஆதவன் வருகைகண்டு மலர்ந்திடும் தாமரைபோல், இறைவனின் தெய்வீக கானம் கேட்டு என் மனமாகிய மொட்டு மலர்ந்தது. தாமரை தன் நாயகனுகிய ஆதவனின் உதயத்தை அன்புடன் வரவேற்பதுபோல், என் மனமும் தன் காதலனுகிய இறைவனின் வருகையை ஆவலுடன் வரவேற்றது.

சோகமுடையவன் நெஞ்சத்தைக் கவலையென்னும் கருமுகில்கள் சூழ்வதுபோல் என் மனமாகிய மொட்டை, கன்னி மேற்கொண்ட காதலென்னும் கொடிய துன்பம் சூழ்ந்திருந்தது. ஆனல் சூரியனைக்கண்டு மறைந்திடும் இருள்போல், ஞானசூரியனைக்கண்டு என் மனதைச் சூழ்ந்த துன்பமெல்லாம் மாயமாய் மறைந்தன.

பறவைகளின் கானத்தில் இறைவன் என்னை அழைக்கும் குரலைக் கேடகிறேன். கதிரவனின் கிரணங்கள் என்னை அணைக்கின்றன. அவைகளில் இறைவனின் திருக்கரங்களைக் காண்கிறேன். வலிதில் என்னை அணைக்கும் இறைவனில், நான் கொண்ட காதலே தெய்வீகமானது என்பதை உணர்ந்தது, ஞானோதயம் கண்ட என்மனம்.

சுயநலம் சற்றேனும் இல்லாதவள் அக்கன்னி. என்மனக் கூண்டை வலிதில் விட்டேகி அங்கே இறைவனுக்கு இடமளித்தவள் என் தாயல்லவா?

SAMUEL SONS & Co., Ltd.,
HOSPITAL ROAD, JAFFNA
T'GRAM: ECHIRON T'PHONE: 62
Head Office:- 371, OLD MOOR ST.,
COLOMBO

● இரும்பு
கம்பிகள்
கேடர்கள்
சிலாகைகள்
அச்சுகள்
தகடுகள்

○ நீர் இறைக்கும்
யந்திரங்கள்
குழாய்கள்
தாங்கிகள்

○ கல்வனைஸ்
தகடுகள்
தாங்கிகள்
வாளிகள்

● கைத்தொழிற்குரிய
ஆயுதங்கள் மற்றும்
கமத்தொழிற்
கருவிகளும்

● பித்தளை
தகடுகள்
பூட்டுகள்
பிணைச்சல்கள்

○ மைவகைகள்
மை எண்ணெய்
வாணிஸ்

சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்
இலவச விலை விபரங்களுக்கு எழுதவும்

சாமுவேல் சன்ஸ் & கம்பெனி லிமிரெட்
ஆ[illegible]பத்திரி [illegible] : யாழ்ப்பாணம்
தந்தி : 'எச்சிரன்' [illegible] : 62
[2590]

புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

புடவைக் கூப்பன்கள்

ஒன்பதுமுடிய உள்ள புடவைக் கூப்பன்கள் ஜனவரி மாதம் முடிந்ததும் வலுவு அற்றதாகின்றன; அன்றியும் பயன்படுத்தப்படாத கூப்பன்களுக்காகப் புதிய கூப்பன்கள் கொடுக்கப்படமாட்டா.

2. 1946-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ந் திகதிக்குமுன் இக்கூப்பன்களைப் பயன் படுத்தவும்

ஈ. ரெட்றிக்கோ
புடவைக்
கட்டுப்பாட்டதிகாரி

கொழும்பு 1945-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ந் திகதி
[2600]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னுகம்: பார்த். தை எஉ


## புதிய சர்வதேச சங்கம்

எந்நாட்டினரும் எச்சாதியினரும் மனவிசுவாசத்துடன் விரும்புவது உலக சமாதானமே. உலகில் யுத்தம் தோன்றுது சமாதானமும், ஒற்றுமையும், நிலைபெறவேண்டுமென்று முயல்வோர்க்கு அளவில்லை. ஆனல் எல்லா எத்தனங்களும் பாதுகாப்புகளும் இதுவரையும் யாவரும் கருதிய பயனை அளியாதாயின. இற்றைக்கு இருபத்தேழு வருடங்கட்கு முன் வேர்ஸேல்ஸ் நகரில் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச சங்கம் இருந்தவிடமுந் தெரியாது மறைந்துபோயிற்று. இச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட போது இக்கதி வந்தெய்துமென எவரும் நினைத்தது கிடையாது. பெரும் நன்மையை உலகம அடையப்போகின்றது, யுத்தத்துக்கு எல்லை வந்துவிட்டதென்று பலரும் அப்போது குதூகலமடைந்தனர். யுத்தத்துக்குக் காரணமாகும் குறைகளை நீக்காது யுத்தத்தைத் தடுப்பதென்பது எப்படி? எனவே, கொடிய மகா யுத்தம் பழையபடி தோற்றி உலகினை வாட்டுவதாயிற்று.

சென்ற வாரம் தொடக்கமாகப் புதிய சர்வதேச சங்கத்தினை உறுதியாக அமைப்பதற்குப் பெரியவோர் மகாநாடு லண்டன் நகரில் நடைபெறுகின்றது. இம்முறை பொதுவாக எல்லா வல்லரசுகளும் மற்றைய சிறிய நாடுகளும் சமாதானத்தைவேண்டி அளவுகடந்த ஆர்வத்துடன் தொண்டுபுரிகின்றன. எவ்வழியிலும் யுத்தத்தை உலகில் தலைகாட்டாது செய்யவேண்டுமென்பதே இவர்களது மனவேட்கை. இச்சங்கம் இனிது நிலைபெறுதற்கும், சமாதானத்தை நிலை நாட்டுதற்கும் அவசியமான ஒழுங்குகளைச் செய்துமுடிப்பாரென்பது நிச்சயம். முன்னர்த் தாம் விட்ட பிழைகளை நன்குணர்ந்து இனியாவது விசுவாசத்துடன் உலகத்திலுள்ள பல்வேறு அரசினரும் உழைப்பின் இப்பெருநன்மை வந்தெய்தாது போகுமா? உலகில் தாம் முதல் ஸ்தானத்தை அடையவேண்டுமென்று எண்ணுவதாற்ருன் எல்லா ஆபத்துகளும் வந்து சேர்கின்றன.

வல்லரசினரெனக் கூறப்படும் சாதியினர்கள், இவ்விஷயமாக நிதானமாக நடந்துகொள்ளின், ஒருபோதும் மகாயுத்தம் ஏற்படக் காரணமில்லை. இவர்களுக்கிடையில் ஏற்படும் பொருமையும், அதிகார வாஞ்சையும் ஈற்றில் யுத்தமாக முடிந்துவிடுகின்றன. பழைய சர்வதேச சங்கத்தில் அநேக பிரதானமான நாடுகள் சேராதிருந்தன. சமாதானத்தை நிலைநாட்டக்கூடிய அமெரிக்கா, ருஷியா முதலிய நாடுகள் புறத்தே நிற்கச், சர்வதேச சங்கம் நன்மையோடு நிலைபெறுமென எப்படிக் கூறுவது? அத்துடன் வல்லரசினரென அப்பொழுது கணக்கிடப்பட்ட பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், ஆகிய நாடுகள் தாம எவ்வளவு கூடிய நன்மையை அடையலாம், புதிதாகத் தாம் பெறக்கூடிய நாடுகள் யாவை, தமது வியாபாரத்தை விருத்திசெய்ய வழியாது என்று சுயநலத்தை நாடினவேயன்றி, உலக சமாதானத்தை உள்ளத்தில் முழுமனத்துடன் மேற்கொண்டில. அன்றியும் பரஸபரம் இந்நாட்டினர்கட்கிடையில் அந்தரங்கத்தில் மனத்துவேஷமும் அழுக்காறும் மிகுந்திருந்தனவென்பது யாவரும் அறிவரே.

ஆனல் இப்போது புதிதாக ஏற்படவிருக்கும் சர்வதேச சங்கம் பல பெரிய நற்சகுனங்களுடனும் எல்லாச் சாதியினர்களுடைய ஒத்துழைப்புடனும் ஆரம்பிப்பதாகின்றது. இம்முறை அமெரிக்கா, ருஷியா ஆகிய இவ்விரு நாட்டினரும் உலக சமாதானத்தை நிலைபெறச் செய்வதில் அளவுகடந்த ஆர்வமுடையராகக் காணப்படுகின்றனர். இவர்களுடன், சீன, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளும் வித்தியாசமின்றி ஒத்துழைக்கப் பின்னிற்க மாட்டா. விஷயமிவ்வாருகச் சித்தியடையாது போவதெப்படி? புதிய நாடுகளைப் பிடித்துத் தமது ஆதிக்கத்துட் கொண்டுவர வேண்டும், உலகத்தின் செல்வம் முழுவதையும் தாம் அபகரிக்க வேண்டும் என்ற வாஞ்சை அமெரிக்காவுக்காவது ருஷியாவுக்காவது கிடையாது. எல்லாச் சாதியினரும் தமது இஷ்டப்படிவாழ இடம் பெற வேண்டுமென்பதே இவர்களின் மகத்தான கொள்கை. எனவே இம்முறை சர்வதேசசங்கம் பழையபடி அலங்கோல நிலையை அடையாதென்பதே எமது நம்பிக்கையாகும்.

அத்துடன் அமெரிக்கரிடத்தில் அணுப்பிரளயக் குண்டும் கைவசமுள்ளது. நீதிகடந்து உலகத்துக்கு ஊறுவிளைப்போரை வழிப்படுத்த இக்குண்டு பெரும் உதவியாகும். எனவே உலக சமாதானத்தை நிலைபெறச் செய்யும் முழுஉரிமையும், அதிகாரமும் அமெரிக்கரிடமுளதாய்விட்டது. மேலும் அமெரிக்கர் பரம்பரையாக நீதியாக நடக்கும் இயல்புடையவர். தம் நாடுபோல் மற்றைய நாட்டினரும் சனநாயக அரசியலைப் பெற வேண்டுமென்ற விருப்பம் மிகுதியுமுடையவர். இத்துடன் பிரிட்டனில் தொழிற் கட்சியினர் அதிகாரத்துக்கு வந்ததும் நல்ல அறிகுறியேயாகும். உலகத்தை யடக்கித் தமக்குக்கீழ் என்றும் வைத்திருக்கவேண்டுமென்ற கோட்பாடும் இவருக்குக்கிடையாது. ருஷியருடைய அரசியல் முறையும் யாவரும் அறிந்ததே இவ்வாருய சந்தர்ப்பங்கட்கிடையில் உலக சமாதானத்தை நாட்ட மகத்தான முயற்சி லண்டனில் நடக்கின்றது. எல்லாமாக ஐம்பத்தொரு நாடுகள் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுவதாக அறிகின்றோம் இச் சங்கத்தின் உறுதிநிலைக்குப் பிரதானமான கொள்கையொன்று அடிப்படையாகவுளது. அது ஒருசாதியினரை இன்னொரு சாதியினர் அடக்கியாளும் முறை முற்ருக நீங்க வேண்டும என்பதே. கீழைத்தேச நாடுகளாகும் இந்தியா, இலங்கை, பர்மா, இந்தோசீனம், கீழ் இந்தியத்தீவுகள் என்பன பூரண சுதந்திரத்தைக் கட்டாயமாக அடையவேண்டும். அப்பொழுதுதான் உலக சமாதானம் நிச்சயமாக உறுதிப்பாடு அடைந்ததென்பாம்.

## ORDER NISI

*In the District Court of Jaffna*

In the matter of an intestate estate and effects of late Nesammah wife of Ponniah Navaratnam of Achcheloo in Jaffna.

*Deceased*

*Testamentary Jurisdiction* No. 417

1. Murugesu Kathiravelu and wife
2. Archikuddy both of Achcheloo

*Petitioners*

*Vs.*

Ponniah Navaratnam of Kokuvil presently of Saraswathy Vidiasalai Badulla

*Respondent*

This matter coming on for disposal before S. J. C. Schokman Esquire District Judge Jaffna on the 8th day of June 1915 in the presence of Mr. A. Subramaniam Proctor on the part of the petitioners and the petition and affidavit of the petitioners having been read :-

It is ordered that the petitioners as heirs of the deceased be declared entitled to take out Letters of Administration to the estate of the deceased and that Letters of Administration be issued to them accordingly, unless the respondent or any other person shall on or before the 20th day of July 1945 appear and show sufficient cause to the satisfaction of this court to the contrary.

Jaffna this 8th day of June 1945

(*Sgd*) S. J. C. Schokman
District Judge

Time extended to 31st January 1946

(*Sgd*) R. R. Selvadurai
District Judge

# பாதை ஓரத்தில்

★

## பாட்டைசாரி

**பொங்கற் திருநாள்** வந்துபோய்விட்டது. தை பிறந்தால் வழி பிறக்குமென்று தமிழர்களாகிய நாங்கள் சொல்லி வருகின்றோம். தை பிறந்தாலும் பிறந்தது. ஆனல் எங்கள் நாட்டில் பசியும் பிணியுமென்ற கதைதான் எங்கும் அடிபடுகின்றது. தினசரிப்பத்திரிகைகளைப் படிக்கும்போது அம்மைநோய் எங்கும் பரவுகின்றதென்ற பயங்கரச் செய்தி பெரிய திகிலை உண்டாக்குகின்றது. கொழும்பில் மட்டுமல்ல; யாழப்பாணம்போன்ற வெளியூர்களிலும் நோய் பரவப் பிரயத்தனஞ் செய்கின்றது.

மறுபக்கத்தில் மலேரியாவின் கோலாகலம். கேகாலை என்ற இடத்தில் மக்களை மலேரியா சரியாக வாட்டுகின்றது. போதியவளவு 'குவினைனின்' இல்லாத காரணத்தால் நோயின் உக்கிரம் அதிகரிக்கின்றது. புதிய அரசியற் திட்டம் இலவசக்கல்வி, புடவைக்கட்டுப்பாடு என்ற விஷயங்களை நிறுத்திவிட்டு, அரசாங்கம் மக்களின் சுகத்தைச் சிற்றளவு கவனிக்கவேண்டும்.

### யாழ்ப்பாணமும் தமிழும்

தமிழைச் சிலர் கொலைசெய்கின்றனர் என்று ஒருசிலர் தலைதலையென்று அடித்துக்கொள்கின்றனர். இருந்தாற்போலிருந்து தமிழில் இவ்வளவு ஆர்வம் ஐந்தாறு தம்பியாண்டான்களுக்கு ஏற்பட்டிருப்பது தமிழ்த்தாய்க்கே நூதனமாகத் தோன்றலாம். ஆனல் யாழ்ப்பாணத்தார் தமிழைத் தண்ணீர் ஊற்றி வளர்த்து வருகின்றனர் என்பது தமிழ் நாட்டாரின் அபிப்பிராயம்.

சமீபத்தில் எங்கள் மத்தியில் உலாவிய ஸ்ரீ எ. கே. செட்டியார் யாழ்ப்பாணம் பற்றித் தமது குமரி மலர் வெளியீட்டில் எழுதியிருக்கின்றார். அதிற் பின்வருமாறு குறிப்பிட்டுமிருக்கின்றார் 'யாழ்ப்பாணத்தார், தாங்கள் பேசும் தமிழ்தான் சரியான தமிழ் என்று நினைக்கின்றனர்; அவ்வாறே கூறுகின்றனர். அவர்கள் நினைப்பதும் கூறுவதும் பெருமைப்படுவதும் முற்றிலும் சரி என்றே எனக்குத் தோன்றுகிறது. நாம் தமிழ்மொழியை வளர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு, பிறமொழிச் சொற்களைத் தினந்தோறும் தமிழில் புகுத்தி வருகிறோம். ஆனல் யாழ்ப்பாணத்தார் தான், கன்னித் தமிழை அவளது இளமை குன்றுது பாதுகாத்து வருகின்றனர்.

### இரு பிரகிருதிகள்

பத்திரிகைகளில் ஹாஸ்யத் துணுக்குகளை வாசித்து அனுபவிக்கின்றோம். ஆனல் சிலவேளைகளில் பத்திரிகை ஆசிரியர்களே ஹாஸ்யமாக நடந்து கொள்ளுகின்றனர். பின்வரும் சம்பாஷணை பத்திரிகை நிலையம் ஒன்றில் நிகழ்ந்தது? **களம்:** இயமலோகம் **காலம்:** நடுநிசி. **பத்திராதிபர்**, உதவியாசிரியரை வரவழைத்துப் பேசுகின்றார்: எனது புத்தகத்துக்கு மதிப்புரை வேண்டியிருக்கின்றதே.

**உதவியாசிரியர்:** வேறு பத்திரிகைகளுக்கு அனுப்பவேண்டியது தானே!

**பத்திராதிபர்:** அவர்கள் மதிப்புரை எழுதமாட்டார்கள்.

**உதவி ஆசிரியர்:** சரி, நீங்களே மதிப்புரையை எழுதி எனது மேசைக்கு அனுப்பி வைக்கவும். நான் அதை எங்கள் பத்திரிகையில் எனது மதிப்புரையாகப் போட்டுவிடுகிறேன்

**பத்திராதிபர்:** மிகவும் சந்தோஷம். சங்கடந் தீர்ந்தது. அப்படியே செய்துவைக்கின்றேன.

## ORDER NISI

*In the District Court of Jaffna*

In the matter of an intestate estate and and effect of late Sivaguru Sinnathurai of Urumparay in Jaffna.

*Deceased*

*Testamentary Jurisdiction* No. 481

Sivaguru Aiyadurai of Urumparay presently of Colombo.

*Petitioner*

*Vs.*

1. Chinnachchippillai widow of Urumparay.
2. Sivaguru Thambiah alias Suppiah of Urumparay presently of Malaya.
3. Sivaguru Sangarappillai of Urumparay.
4. Sivaguru Kandiah of Urumparay presently of Malaya.
5. Kathiresu Appathurai of Urumpary presently of Colombo and wife.
6. Nagammah of Urumpary.
7. Ponnamma widow of Alagaratnam of Urumparay.

*Respondents*

This matter coming on for disposal before S.S.J. Goonesekera Esquire District Judge Jaffna on the 31st. day of October 1945 in the presence of Mr. A Subramaniam Proctor S. C. on the part of the petitioner; and the petition and affidavit of the abovenamed petitioner having been read:—

It is ordered that the petitioner abovenamed be and he is hereby declared entitled, as the heir of the deceased abovenamed to have Letters of Administration and Letters of Administration be issued to him accordingly, unless the respondents or any other persons interested shall on or before the 30th day of November 1945, show sufficient cause to the satisfaction of this court to the contrary.

This 31st day of October 1945

(*Sgd.*) S. S. J. Goonesekera
District Judge

Time extended to 1-2-46.

(*Sgd.*) R. R. Selvadurai
District Judge.

## 196-வது இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டறிவித்தல்

(இவ் அறிவித்தலின் தமிழ் மொழி பெயர்ப்பில் பிழை நேர்ந்திருப்பதால் திருத்தத்துடன் தரப்படுகிறது.)

இத்தால் வியாபாரிகளுக்கும் பொதுஜனங்களுக்கும் அறிவிப்பது என்னவென்ருல் பெண்களின் உள் உடைகளாகிய வெஸ்ட்ஸ் மிக்கர்ஸ் பான்ரீஸ், இரா உடுப்புகளும், கால்மேசுகளும் ஸ்ரொக்கிட்ஸ், லொக்கிட்ஸ் செயற்கைப் பட்டுகளால் செய்யப்பட்டவையானல் இவ் அறிவித்தல் வெளியாகுந் திகதியிலிருந்து விலைக்கட்டுப்பாட்டு விதிகளினின்றும் தவிர்க்கப்பட்டுள்ளன விலை அடையாளம் இடுவதினின்றும் தவிர்க்கக்கோரும் விண்ணப்பம் வழமைபோல்புறக்கோட்டையிலுள்ள பங்கீட்டு உதவிக் கட்டுப்பாட்டதிகாரிக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வகையான தவிர்ப்பு கொடுக்கப்படும் வரைக்கும் பொருள் வியாபாரத்திற்கு வெளியில் வைத்திருக்கப் படாது.

இப் பொருட்களுக்குப் பெறப்படும் கிரயம், நியாயம் நீதி அற்றதாகக் காணப்பட்டால் விலை அடையாளம் இடுதலிலிருந்து தவிர்க்கப்பட் டிருப்பது மீட்டுக் கொள்ளப்படும்.

**எம். எவ். டீ எஸ். ஜயரட்ன**
பதிற்புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 8-1-46 [2610]

## மந்திரியின் கூற்று

**புதிய** கல்வித்திட்டம் சகலருக்கும் சம அந்தஸ்தை அளிக்குமென்பது டொக்டர் கன்னங்கராவின் நம்பிக்கை. மாமேறுபவன்ஒருவனின் பிள்ளைக்கு விவேகம் அதிகமிருந்தால் அப்பிள்ளை பிரதம நீதியரசராக வர முடியும். இல்லாதபோனுற் கல்வி மந்திரியாகவும் திகழலாமெனவும் மந்திரி கூறுகின்ருர்.

## காங்கேசன்துறைத் தொகுதி மத்திய கல்லூரித் திறப்பு விழா

### கல்வி மந்திரியாருக்கு நல் வரவேற்பு

சென்ற புதன்கிழமை (16-1-46) பிற்பகல் காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள முதலாவது மத்திய கல்லூரியின் திறப்புவிழா வெகுவிமரிசையாக நடைபெற்றது.

அன்று பிற்பகல் 3½ மணிக்குக் கல்வி மந்திரியார் டொக்டர் C.W. W. கன்னங்கரா, அரசாங்க சபை அங்கத்தவர் திரு. சு. நடேசன், வடபகுதிக் கல்வியதிகாரி திரு. V. K. நாதன் ஆகிய மூவரும், இரு புரவிகள் பூட்டப்பெற்றஅலங்கார இரதத்திற் கட்டுவன் சந்திக்குக் கிட்டுமானத்திலுள்ள உக்கடைச் சந்தியிலிருந்து கல்லூரிவரை ஊர்வலமாக மேளவாத்தியத்துடன் அழைத்துச் செல்லப்பட்டனர் காங்கேசன்துறைத்தொகுதியே திரண்டு வந்ததுபோல் ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர். ஊர்வலத்தின்போது மந்திரியாரையும் மற்றைய பிரமுகர்களையும் மக்கள் பல இடங்களிலும் பூரண கும்பம் நிறுத்தி மாலைசூட்டி வரவேற்றனர். ஊர்வலம் நிறைவெய்தியதும் 'மந்திரியார் 'மீனுட்சிகமம்' என்ற விஸ்தீரணமான தோட்டத்தையும், யந்திரசாலையையும் பார்வையிட்டனர். கல்லூரியை அண்மியதும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிச் சாரணர்கள் மந்திரியாரைக் கௌரவ மரியாதை யளித்து வரவேற்றனர். அதன் பின்னர் கல்லூரியின் முன்றிலில் அலங்கரிக்கப்பட்டிருந்த பந்தருள் பல பிரமுகர்களும் திரளான மக்களும் புடைசூழ மந்திரியார் அழைத்துச் செல்லப்பட்டனர். சாரணர்களாற் பரிமாறப்பட்ட சிற்றுண்டி விருந்தின் பின்னர் மாலை 6 மணியளவில் டொக்டர் கன்னங்கரா அவர்கள் புதிய மத்திய கல்லூரியைத் திறந்து வைத்தார்.

அடுத்து, கல்லூரி மண்டபத்திற் காங்கேசன்துறைப்பிரதிநிதி திரு. சு. நடேசன் அவர்களது தலைமையில் பகிரங்கக் கூட்டம் நடைபெறலாயிற்று. மந்திரியாரை வரவேற்றுப் பாமாலைகள் சூட்டப்பெற்ற பின்னர், மயிலிட்டிக் கிராமச்சங்கத் தலைவரும், 'ஈழகேசரி' ஆசிரியருமாகிய திரு. நா. பொன்னையா அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. வயாவிளான், வழக்கறிஞரும் சிறந்த தேசத்தொண்டருமாகிய திரு. வ. இராசநாயகம் அவர்கள் வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தார்.

தலைவர் அவர்கள் தமது முன்னுரையில், கல்வி மந்திரியாரின் ஊக்கத்தையும், விடாமுயற்சியையும் வெகுவாகப் பாராட்டினர். இக் கல்லூரியின் ஸ்தாபகத்துக்காக அரும் பாடுபட்ட காங்கேசன்துறைத் தொகுதி மக்களையும், இக் கல்லூரி அமைப்புக் காரிய நிர்வாக சபையினரையும், விசேஷமாக திரு. பொன்னையா அவர்களின் வள்ளற்றன்மையையும் வானளாவப் புகழ்ந்து பேசினர். அடுத்தபடியாக, திருநெல்வேலிச் சைவாசிரியகலாசாலை அதிபர் திரு. சி. சுவாமிநாதன் B.A., திரு. V. முத்துக்குமாரு M. A., ஆகிய அறிஞர்கள், மத்திய கல்லூரி என்ன என்பதையும், அதனல் நாட்டிற்குண்டாகும் நன்மைகளையும் விரிவாக எடுத்துரைத்தனர். அதன்பின்னர், கல்வி மந்திரியார் ஒரு நீண்ட விரிவுரை நிகழ்த்தினர் அதனைத் தமிழில் நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைப் பிரதமாதிபர் திரு. J. C. அமரசிங்கம் அவர்கள் விசேஷமாக மொழிபெயர்த்தனர். ஈற்றில், கட்டுவன் திரு. க. பொன்னம்பலம் அவர்களின் வந்தனேபசாரத்துடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ நண்பர்களே!

**N. T. தம்பி, சிரம்பான்**

> மலாயா நண்பர்களுக்கென்று 'சுயா' எழுதுவதற்குப் பதிலேபோல, மலாயாவிலிருந்து ஒரு அன்பர் இதை எழுதியுள்ளார். மலாயா நிலபரங்களை, அங்கிருப்பவர்மூலமாக வாசகர்கள் அறிந்துகொள்வது சிறந்ததாகையால் இது வெளியிடப்படுகிறது.—ப—ர்.

நீங்கள் 25-11-45-ல் எழுதிய கடிதம் கிடைத்தது. அதற்கு மறுமொழி வரைந்து எயர்மெயில்மூலம் அனுப்பாததைப்பற்றி மன்னிக்கவும். தாமதத்திற்குக் காரணம் எங்கள் ஊரவர் எவராகிலும் தமிழ் எழுத்தாளர்களாக இங்கில்லை. இங்குள்ள எல்லாரும் அனேகமாக வெறும் கிளாக்கர்கள்தான். நல்ல எழுத்தாளர் ஒருவர் இருந்தால் உடன் மறுமொழி வந்திருக்கும்.

நாங்கள் கொடிய அரக்கரின் கையில் அகப்பட்டு அனுபவித்த கஷ்டத்தைப் பார்க்கிலும் உங்களுடைய சுக லாபம் எப்படி? பஞ்சத்தை எப்படிச் சகித்தீர்கள். என்ற கவலைதான் எங்களுக்கு அதிகம், நீங்களும் சுகமாக இருந்தீர்கள்என்று அறிந்ததும் அதிக சந்தோஷமுற்றோம். மனைவிமார்கள் உவ்விடம் இருக்கக் கணவன்மார் இவ்விடம் அனுபவித்த புள்ளி விபரங்கள் எழுதியிருந்தீர்கள். ஆனால் கணவன்மார் இவ்விடம் அனுபவித்த கஷ்டங்களை அறிவிப்பது என் கடமையல்லவா? ஐம்பதுவயதுக் கிளாக்கர் காரியாலயத்திற்குப்போனால் ஜப்பான்துரை முகம்கொடுத்துப் பேசுகிறார் இல்லை. என்னுடன் பேசுகில் "நிப்பொன்கோ"வில் பேசு "இங்கிலிஸ்" விரோதியின் பாஷை எனக்குப் பிடிக்காது என்று உபத்திரவப்படுத்துகிறார். ஐயோ! இருபத்தெட்டு வருஷமாகப் பார்த்த வேலையை இந்தக் கொடிய அரக்கன் வந்து தொந்தரவு செய்கிறானே என்ன செய்வோம்; அந்த அநியாயப் பாஷையையாகிலும்படித்துப்பார்ப்போம் என்றால் அதுவும் மூளைக்குள் நுழைகிறதில்லை; இதென்னப்பா சங்கடம்? வீட்டுக்குப் போனால் அதிலும்சங்கடம், சமையல் ஆள் வைத்துச் சமைப்பதற்கும் ஆள் இடையாது. எல்லோரும் "இந்தியன் நாஷனல் ஆமியில்" துப்பாக்கி தூக்கப் போய் விட்டார்கள். மிகுதியாய் உள்ளவர்கள் ஜப்பானியரின் வலோற்காரத்தால் சீயத்திற்குப் புகையிரதப் பாதைபோடப் போய் விட்டார்கள். "கிளப்பில்" சாப்பிடுவதாகிலும் பெண்டாட்டி தாலியை விற்கலாம். அந்த உத்தமியும் ஊரில் இருக்கிறாள் ஏதோ அரைகுறையாகச் சாப்பிட்டாலும் இரவில் தூக்கமில்லை. மனைவி எப்படி இருப்பாள்? பிள்ளைகள் சீவனத்திற்கு என்ன செய்கிறார்கள்? கொடியபஞ்சம் என்கிறார்களே. நல்லதங்காளும் பிள்ளைகளும் செய்த மாதிரி ஆகுமோ என்ற ஏக்கம். இப்படியாக நினைத்த கணவனுக்கு மனைவியும் பிள்ளைகளும் சுகமாய் இருந்தோம். அரசாங்கத்தார் உங்கள் பெயரினால் எங்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூபா 130 கொடுத்தார்கள் என்று அறிய எப்படி இருக்கும். மனைவிமக்களைக்காண ஆசைபூறும்தானே. சற்றுச் சமாதானமாய் இரும். கப்பல் வசதி இல்லை. இப்போ துருப்புகளை அனுப்பும் வேலையில் இருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் குடும்பங்களைச் சேர்த்து வைக்கும் சேவை புரிவார்கள்.

மனைவிமக்களுடன் இருந்தவர்களைப்பற்றியும் அறிய ஆவலாய்த்தான் இருக்கும், மாமன் மாமி சீறிச்சினந்து கொடுத்த சீதனத்தில் காணி பூமி என்றும் உங்களுடன்தான். நகைவகையுடன்தான் இங்கே வந்தோம். இப்போ அவையில் அனேகம்நகை தவறிவிட்டன. காரணம் கிளாக்கர் சம்பளம் மாசத்தில் ஐந்துநாளைக்குக் காலட்சேபம் செய்யக்காணாது. மிகுதிஇருபத்தைந்து நாளும் வரிசையாக நகைகளை விற்றுத்தான் உயிரையும் மானத்தையும் காப்பாற்றினோம். "பவுணுக்கு" நல்ல கிராக்கி இருந்தது. இதுவும் எங்கள் பூர்வ புண்ணியந்தான். 2 பவுண் விற்றால் ஒருமாதப்பொழுதைப் போக்கக்கூடியதாய் இருந்தது. மாமன் மாமியர்கள் நகையை விற்றுச் சாப்பிட்டுவிட்டோம் என்று ஒருக்கால் குறை சொன்னாலும் வேறு ஒரு காரணத்தால் சந்தோஷப்படுவார்கள் என்பது நிச்சயம். உங்கள் மகள் இப்போ வேறு தினிசு. விதம்விதமான "பட்சணங்கள், கேக்குகள், ரொட்டிகள். சிற்றுண்டிகள் எல்லாம் செய்யக் கற்றுக்கொண்டாள், மரவள்ளிக்கிழங்கை அதனுடைய உருவையே மாற்றி எத்தனை வகையான சாப்பாடுகள், செய்யக்கற்றுவிட்டாள்."

அம்மாடி போதும் நீங்கள் பணம், பண்டம், துணி மணி அனுப்பும் உபகாரம். தயவு செய்து நீங்களே அவற்றை வைத்துக்கொள்ளுங்கள். அதற்குப் பிரதி உபகாரமாக எங்களிடம் அது வேண்டும், இது வேண்டும், வேலியடைக்க வேண்டும், வீடுவேய வேண்டும். என்ற பல்லவிகளைக் கொஞ்சக் காலம் பாடாது எப்படிச் சென்ற 3½ வருஷகாலமாக இருந்தீர்களோ அதுபோல் இன்னும் சிறிதுகாலம் இருங்கள். உங்கள் அரசாங்கசபையார் ஒரு கோஷ்டியை எங்களுக்கு உதவி அளிக்க அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் செய்யும் கைமாறு ஒன்றேபோதும். அவர்களுக்கு உதவியாளர்களாக ஒவ்வொரு கிராமங்களிலும் 10-15 ஊரவர்கள் கொண்ட சங்கம், இவ்வளவு சிறப்பினைக்கும் தப்பியொட்டி உதவிபெறும் நண்பர்களுக்கு பணம் வெள்ளி 10. இவர்கள் தாய்நாட்டுக்கு அனுப்பி வைத்த அனாதைகளை நீங்கள் கொழும்புத்துறைமுகத்தில் பார்த்திருப்பீர்கள். கணவனை இழந்து பிள்ளைகுட்டிகளுடன் தவிக்கும் தாய்மார்களும், நோய்வாய்ப்பட்டோர் தாய்நாடுசென்று பெற்றதாய் முன் உயிரைவிட்டால் கை கண்ட பலன் என்று தவிக்கும் நண்பர்களும், இவர்களை எதிர்நோக்கி நோக்கிக் கண்ணும் பூத்துவிட்டது. என்ன பரிகாசம். இது அரசாங்க விஷயம். நான் ஏன் அதை எழுதுவான். ஏதோ ஆத்திரத்தில் இரண்டுவரி எழுதிவிட்டேன். மலாய்நாடு வருவதாக மூட்டைகட்டிக்கொண்டு இருக்கும் முதல் கோஷ்டியைச் சேர்ந்த நண்பர்களே! உங்கள் மூட்டைகளை அவிழ்த்துவிட்டு ஏதும் உவ்விடம் பார்த்தால் நல்லது. வேலையில்லாத் திண்டாட்டம் இங்கே அதிகம். நீங்கள் எதிர்பார்த்ததுபோல் நாங்கள் அநேகம் பேர் மறு உலகம் போகவில்லை. உத்தமன் மரவள்ளிக்கிழங்கின் உதவியால் அந்த யாத்திரையை இன்னும் சிறிதுகாலத்திற்குத் தவணையிட்டிருக்கிறோம். கூலிவேலைக்கு ஆட்கள் தேவைதான்; காரணம் அதிகம்பேர் சயாம் போய் அங்கிருந்து தாத்தா ஊருக்குப் போய்விட்டார்கள். ஆனால் அவ்வேலை நீங்கள் பார்க்கமாட்டீர்கள்; காரணம் அண்ணன்மார் மேல் உத்தியோகம் பார்க்க நீங்கள் அவர்கள் கீழ் கூலி வேலை பார்க்க உங்களுக்குப் பிடிக்காது. உங்கள் நடையுடை பாவினைக்கு ஏற்ற சம்பளமும் கிடையாது.

உங்களைப் போல் இங்கும் சில கள்ளமார்க்கட் வியாபாரிகள் பிரகாசித்தார்கள். அவர்களிடம் 5—10 இல்லாமல் இல்லை. ஆனால் 50—100க் கணக்கில் முதலாளியாக வந்திருப்பார்கள். அதிட்ட தேவதை பிற்கூற்றில் மோசம் பண்ணிவிட்டாள். வாழைப்பழ நோட்டு வெறும் கடுதாசியாக மாறிவிட்டது. கட்டி ஒன்று 40காசு அதாவது $6000 இடையுள்ள நோட்டுகள் தற்போது நடமாடும் பிரிட்டிஷார் நோட்டில் 40 காசுக்கு வாங்கலாம். தேவையாய் இருப்பவர்கள் உடனே கேட்கலாம்.

சென்ற 3½ வருடமும் நாங்கள் சீனியைக் காண்பது அரிதாகமுடிந்தது. ஜப்பான் துரை சீனி கொடாமல் இல்லை. ஆனால் அவர் கொடுத்தது ஒரு முறை வாயிற்போட்டுக் கொஞ்சம் தண்ணீர்ஊற்றி உள்ளுக்குவிடத்தக்க எடை கொண்ட மருந்துப் பிரமாணம் தான். இதன் குறையை நிவிர்த்திபண்ணுவதற்காக என்ன பரிகாரம் தேடினோம் தெரியுமா? நீங்கள் பனம் கருப்பட்டி செய்து உங்கள் கஷ்டத்தை நிவிர்த்தி செய்திருப்பீர்கள். நாங்கள் தென்னை மரத்தின் பதனியைக் கொண்டு பாகம்பண்ணினோம்; இருந்தும் பெயர் வைக்கத் தெரியவில்லை, பழைய ஞாபகத்தில் அதையும் கருப்பட்டி என்றுதான் அழைத்து வருகிறோம். தற்பொழுது இதன் பெயர் மறையவில்லை; இக் கருப்பட்டி குரக்கன் மாச் சாப்பாட்டிற்கும், கிழங்குமா "அலுவா"வுக்கும் உவந்ததாய் இருக்கும்.

உங்களுக்கு "வெறி சொறி". ஆச்சியின் விருப்பமும் வேண்டாம் மாமாவின் அட்டகாசமும் வேண்டாம் என்று அவரவர்கள் தங்கள் பாட்டில் விவாகம் செய்துகொண்டார்கள். 16 வயதுக்கு மேற்பட்ட மாப்பிளை கிடைப்பது அதிக கஷ்டம். இலங்கை உத்தியோகத்தருக்கென வைத்திருந்த ஏராளமான ஸ்ரீதனங்களையும் கொடுத்துப் பெண்களையும் கல்யாணம் செய்து காட்சிகள் பார்த்து விட்டார்கள். சிங்கப்பூர் ஸ்ரீதனத்தை நம்பியிருந்த தோழர்களே! உங்களுக்கு "டாம் சொறி".

எங்கள் குடும்பங்கள் "ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுக்காரோ". காலநேரம் நல்லாய் வரட்டும். கப்பல்களும் நல்லாய் நடமாடட்டும். நாங்கள் உவ்விடம் வந்து சந்திப்போம், நீங்களும் இவ்விடம் வந்து சந்திக்கலாம். எல்லாவற்றிற்கும் தெய்வந்தான் துணை.

இலங்கைச் செய்தியைச் சொல்லிய உங்களுக்கு மலாயாச் செய்தி அறிய ஆவல் இருக்கும். உங்களைப் போல் இவ்விடத்திலும் அரசியல் மாற்றங்கள் வருவதாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். ஏதோ "மலாயன் யூனியனும்"; சிங்கப்பூர் தனிப்படவாம்; மற்றும் ஒன்பது மாகாணங்களும் ஒன்றாம்; என்று பல பல விதமாகப் பேசிக்கொள்ளுகிறார்கள்; அது என்னவானாலும் எங்களுக்கென்ன. இது நல்லாய் இருந்தால் நாங்கள் இதைச் சேர்ந்தவர்கள்; அன்றி உவ்விடம் நன்மையாக இருந்தால் நாங்கள் உவ்விடத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் நாங்கள் "வௌவால்கள்" அல்ல. எங்களுக்கு இரண்டிலும் பங்குண்டு. ஒன்று பிறந்த இடம்; மற்றொன்று வளர்ந்த இடம். ஏன்? நாங்கள் பாக்கியசாலிகள்தானே.

---

## திருமண அழைப்பு

நிகழும் பார்த்திபவரு தைமீ அ-ந்வ (21-1-46) திங்கட்கிழமை இரவு 12 மணிக்கு வரும் சுபமுகூர்த்தத்தில் இறைவனருளால் நாங்கள் இருவரும் [லிந்துலையை யடுத்த ஈல்டன் ஹோலில், (Eildon Hall, Lindula)] திருமணஞ் செய்ய நிச்சயித்துள்ளோம். நண்பர்களதும் உறவினரதும் அன்பையும் ஆசீர்வாதத்தையும்வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

**சோ. சிவபாதசுந்தரம்**
**எம். ஞானதீபம்**

ரேடியோ' நிலயம்,
கொழும்பு, 18-1-46.

---

# வகுப்புவாதம் தொலைய வழி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது என்ன சம்பவிக்கும்? இவ்வித நிலையை எவரும் விரும்பார். நான்ஒருவிஷயத்தைச் சொல்ல விரும்புகின்றேன். பெரும்பான்மைக் கட்சியாராயினென், சிறுபான்மைககட்சியாராயினென். அவர்கள் தேசாளு மன்றத்தில் பொருளாதார நிலையை நோக்கிக் கட்சிகளிற் சேர்ந்துகொள்வாரென்பது எனது நம்பிக்கை. இவ்வித கட்சிகள் ஏற்படின் எல்லா வகுப்பினரும் தாம் விரும்பிய நன்மைகளை இனிது பெற வசதிகள் ஏற்படும்.

### கட்சிகள் தோன்றல்

பழைய டொனமூர்த்திட்டம் கட்சிகள் தோன்றாதிருக்கவே ஏற்பட்டதாகும். ஆனால் புதிய திட்டப்படி கட்சிகள் நிச்சயமாக ஏற்படும். டொனமூர்த் திட்டப்படி கட்சிகள் ஏற்படாதிருந்தமைக்குக் காரணத்தைக் கௌரவ செனநாயக்கா வெளியாகக் குடியேற்றநாட்டு மந்திரியார்க்கு எடுத்து விளக்கியுள்ளார். புதிய அரசியற் றிட்டமோ அதற்கு நேர்மாறானதாகும். சிங்களர் மாத்திரமல்ல; தமிழரும் இலங்கைக்குக் குடியேற்றநாட்டுத் திட்டவரசியல் அவசியம் வேண்டுமென ஆவலுடன் கேட்கின்றனர். இதைத் தடுக்க ஒரு வழியுண்டு. வகுப்புவாத முறையாக தேர்தல் ஏற்படச் செய்யின் ஏற்படும் அரசாங்கம் மிக்க தள்ளாட்டத்தை அடையச் செய்யலாம். அப்பொழுது பிரிட்டிஷாரின் ஆதிக்கம் என்றும் நிலைபெறும். எனவே வகுப்பு முறையில் தேர்தல் ஏற்படவேண்டுமென்று வாதாடுவோர் இலங்கையின் மீட்சியை விரும்பாதவரென்றே கூறவேண்டும். வகுப்புவாதம் புதியதாகத் தோன்றியதொன்றன்று. 18-ம் நூற்றாண்டிற் பிரிட்டனில் மிகப் பரபரப்புடன் நிலைபெற்றது. கனடா தேசத்திலும் வகுப்புவாதம் மிகக் கோரமாக நிலைபெற்றது. பிரான்ஸிய கனடியருக்கும் ஆங்கிலலேய கனடியருக்குமிடையில்நீண்டகாலமாகவாதமிருந்துவந்தது. அப்படியிருந்தும்தேசநன்மையை நாடிய பிரான்ஸிய கனடியர் ஒத்துழைக்க முன்வந்தமையால் கனடாதேசம் குடியேற்றநாட்டு நிலைமையைப் பெற்றுச் சுதந்திர மடைந்தது. கனடிய தேசாளு மன்றத்தில் 245 அங்கத்தவரேயுளர். அதில் ஆக 62 ஸ்தானங்களே பிரான்ஸியக் கனடியர் வகிக்கின்றனர். என்றாலும், இச் சிறுபான்மைக் கட்சியினர் செலுத்தும் ஆதிக்கம் இம்மாத்திரமன்று. காரணம் வகுப்புவாதம் நோக்கப்படாது தேசப் பொதுநன்மைக்கு முதலிட மளித்தமையே.

### யாழ்ப்பாண வாசிகள் அறிய வேண்டியது

மேற் கூறியதிலிருந்து யாழ்ப்பாண மக்கள் நல்ல பாடத்தைக் கற்றுக் கொள்ளலாம். சிங்களருக்கிடையில் பிரிவு ஏற்படுமென்பது நிச்சயம். அதனால் நன்மை யடைபவர் யாழ்ப்பாண வாசிகளே. சிங்களர்க்கிடையில் பிரிவு ஏற்படாவிடின் ஐம்பதுக்கைம்பது என்றபடி ஸ்தானம் ஏற்பட்டும் நன்மை வரப்போவதில்லை. சிறுபான்மையார் உபாயமாக நடந்துகொண்டால் நிச்சயமாகச் சிங்களவர்க்கிடையில் பிரிவினையை உண்டாக்கலாம். ஆனால் வகுப்புவாதத்தைச் சிறுபான்மையினர் மேற்கொண்டு நிற்பின் பெரும்பான்மையாராகும் சிங்களவரும் ஒருங்கு சேர்ந்துகொள்ளுவர். வகுப்புவாதம் முற்றாகக் கைவிடப்படின் பொருளாதார நிலையை மேற்கொண்டு கட்சிகள் நிச்சயமாகத் தோன்றும். டொனமூர்த் திட்டமிருக்கும் வரைக்கும் இலங்கைத் தமிழர் அரசியலின் உண்மை நிலையை அறியாதிருந்தனர்தான். இதுவரையும் இலங்கைக்குவேண்டிய எல்லாப் பொருள்களும் இங்கிலாந்திலிருந்தே வந்துகொண்டிருந்தன. இலங்கை மக்களின் செல்வம் எவ்வளவு வெளியேறிவிட்டது. இங்கிலாந்தில் வசிப்பவர்தாமும் தமது உணவின் பொருட்டு இவ்வளவாகச் செலவு செய்திருப்பாரென நான் எண்ணவில்லை. இனி அப்படியான நிலைமை ஏற்படக் காரணமில்லை. புதிய மாற்றங்கள் வரும்போது சிறிது காலத்துக்குக் கஷ்டமாகத் தானிருக்கும். அப்பொழுது அரசியல் விஷயமாக அபிப்பிராய பேதங்கள் ஏற்படக்கூடும். அத்தருணத்தில் வகுப்புவாத விஷயமாக ஒற்றுமை யடைந்தவர்கள், பொருளாதார விஷயமாகப் பேதமடையின், பெரும்பான்மை வகுப்பினர் அளவுகடந்து ஆதிக்கமடையாமற் றடுக்கலாம்.

இலங்கையிற் கூட்டுத்தொகுதி அரசியல்முறை தொழிற்படாதெனப் பலர் கூறியதை நானறிவேன். இலங்கையில் பொருளாதார முறையில் ஏற்பட்ட கட்சிகள் இல்லாமைதான் அப்படிக் கூறவேண்டியதாயிற்று. ஆனால் இன்னொரு உண்மையை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். கூட்டுத்தொகை மந்திரிசபையினரின் அரசாங்கம் ஏற்பட்டவுடன்தான் பொருளாதாரமுறையில் கட்சிகள் தோன்றும். இந்த நோக்கத்தைக் கொண்டே ஸோல்பெரி விசாரணைச் சபையினர் கூட்டுத்தொகை மந்திரிசபையை வேண்டுமென்று சிபார்சுசெய்தனர். இதனாற்றான் இவ் விசாரணைச் சபையினர், மந்திரிமார் வகுத்த திட்டத்தைப் புதிய இரண்டாவது சபையுடன் இலங்கையாசியற்கு ஏற்றதெனக் குறித்துள்ளார். எனவே புதிய திட்டப்படி வகுப்புவாதம் சிறிது சிறிதாக அருகிப்போமென்பது எனது அபிப்பிராயமாகும்.

---

### பண்டித நேரு எல்லைப்புற விஜயம்

பண்டித ஜவர்கலால்நேரு இம் மாதக் கடையியில் எல்லைப்புறத்துக்கு விஜயம் செய்வாராம். எல்லைப்புறத்தில் ஜனவரி 28 முதல் பிப்ரவரி 25 வரை மாகாண சட்டசபைக்குத் தேர்தல்கள் நடைபெற விருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலாய அன்பர்களுக்கு—V :: "சூபா",

# நின்றது 'அலவன்ஸ்'

இந்த வாரம் எதையோ வெல்லாம் பற்றி உங்களுக்கு எழுத வேண்டுமென்று நான் எண்ணிக் கொண்டிருக்கும்போது இச் செய்தியைக் கேள்விப்பட்டதும் . அவசர அவசரமாக இதைப்பற்றி உங்களுக்கு எழுதி விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பது என்று எண்ணிக்கொண்டு இதை எழுதுகின்றேன்.

இங்கே உங்கள் பெண்டு பிள்ளைகளுக்கும், மற்றும் வேறு உங்களைச் சேர்ந்தவர்களுக்கும், "இலங்கை அரசினர் அளித்து வந்த அலவன்சை நிறுத்திவிட்டார்கள். யப்பானியன் மலாயாவைப் பிடித்துக்கொண்ட காலத்தில் இலங்கை அரசினர் முன் வந்து ஆன காலத்தில் உங்களாட்களுக்கு உதவி செய்திராவிட்டால் அவர்கள் பஞ்சாய்ப் பறந்திருப்பார்கள். நீங்கள் உங்கே கோழி மேய்த்தாலென்ன, காக்காய் பிடித்தாலென்ன, இங்கே உங்களாட்களெல்லாரும் சிங்கப்பூர் உத்தியோகத்தரின் பெண்டு பிள்ளைகள் என்ற மோஸ்தரில் கொஞ்சம் பிலுக்காகவே நடந்து வந்தார்கள். இப்படிப் பழகிக் கொண்டவர்களுக்கு, மலாயாவிலிருந்து நீங்கள் அனுப்பவேண்டியதை அனுப்பத் தடையேற்பட்டு விட்டால் இங்கே அவர்கள் மானம் போய்விடாதா? நல்ல வேளையாக இலங்கை அரசினர் அவர்களுக்கு உதவ முன் வந்து அவர்கள் மானத்தையும் உங்கள் மானத்தையும் காப்பாற்றி வைத்தார்கள். ஆகையால் நீங்கள் எங்கள் அரசாங்கத்துக்குத் தலைமுறை தலைமுறையாகக் கடமைப்பட்டவர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.


சிங்கப்பூர் பறிபோனதும், சிங்கப்பூர்க்காரனுக்கும் பெண்ணைக் கட்டிக் கொடுப்பதா, அவனுக்குக் கொடுத்தகாலத்தில் இங்கேயுள்ள ஒரு தமிழ்ச்சட்டம்பியின் காலைக் கையைப் பிடித்து அவன் கையிற் பெண்ணைக் கொடுத்துவிட்டோமில்லையே, இனியாவது புத்தியாய் நடந்துகொள்ளுவோம், என்று சில வயது வந்த கிழக்சோட்டான்கள் உங்களைப்பற்றிக் குறைவாகவும் பேசிக்கொண்டார்கள். இந்த வகையில் உங்கேயுள்ள எங்கள் வாலிபர்களுக்கு வரும் காலங்களிற் பெண் கிடைப்பதுகூடக் கஷ்டம் போலிருந்தது. ஆனால் எங்கள் இலங்கை அரசினர் இந்த வகையிற்கூட உங்கள் மானத்தை ஒருபடி உயர்த்திவைத்து விட்டார்கள். யுத்தம் தொடங்கு முன் மலாயாவுக்குத் தண்டற் பணத்துக்குப் போய் ஏதும் வாங்கி வலித்து அனுப்பியவர்களின் குடும்பங்களுக்குக் கூட எங்கள் அரசினர் அவர்கள் கடைசியாய் அனுப்பிய தொகையைச் சரிபார்த்து அதற்கேற்ற வகையாக, மலாயா பிடிபட்டதும், ஏதோ கொஞ்சநஞ்சம் உதவி வந்தார்களென்றால், உத்தியோகஸ்தராயிருந்த உங்கள் குடும்பங்களுக்குத் தாராளமாய் உதவியிருப்பார்களென்று நீங்கள் நம்புவீர்கள்தானே! இலங்கை அரசினர் தாராளமாய் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் ஏறக்குறைய மூன்று வருஷகாலம் உதவிவந்தார்கள். ஆனால் இப்பொழுதோ அந்த உதவியை நிறுத்திவிட்டார்கள். நீங்கள் மறுபடியும் முன்போலவே பிரிட்டிஷாரின் கீழ் உத்தியோகம் பெற்றுவிட்டீர்கள் போலிருக்கவேண்டும். ஆகையாற்தான் இந்த அலவன்ஸை அரசினர் நிறுத்திவிட்டார்களாக்கும்.

ஏறக்குறைய மூன்றுவருஷ காலங்களாய் வீட்டுக்கு ஒன்று அனுப்பவேண்டுமென்ற கவலையேயில்லாமற் கிடந்த உங்களுக்கு வந்துவிட்டது பீடை. இனி உங்களை உங்கள் குடும்பத்தவர்கள நச்சரிக்கத் தொடங்கி விடுவார்கள். நானுந்தான் சொல்லுகின்றேன் உங்கள் குடும்பங்களை எத்தனை நாளைக்கென்று பிறர் கையில் விட்டுவிட்டு நீங்கள் சுகமாகக் காலந்தள்ளலாம். நீங்கள் சுமந்த சுமையை நீங்கள்தானே இறக்கவும் வேண்டும். ஆனாற் சிலர் உங்களுக்கு இந்தக் கஷ்டங்கள் ஒன்றையும் வையாது போய்விட்டார்களென்றும் கேள்விப்படுகின்றேன்.

உங்களைப் பற்றி இங்குள்ளவர்கள் அறிந்து கொண்ட செய்திகளிலிருந்து, நீங்கள் இப்போதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பீர்களென்றும், இந்தக்கஷ்டமான சமயத்தில், இந்த அலவன்ஸ் நின்ற செய்தியை உங்களுக்கு அறிவித்து உங்களுக்கு மேலும் மேலும் துன்பத்தைக் கொடுக்கக் கூடாது என்றும் எண்ணிக்கொண்டு சிலவேளை உங்களாட்கள் இதைப்பற்றி அறிவியாது விட்டாலும் என்ற எண்ணத்தினலேதான் இதை நான் உங்களுக்கு அவசர அவசரமாக எழுதத் தொடங்கினேன். இனி உங்கள் பாடு.

இதோடு மலாயா யப்பானியரால் பிடிபட்டதும் இங்கேயுள்ள சிங்கப்பூர்ப்பென்ஷன்காரர் பட்ட பாட்டையும் உங்களுக்குச் சொல்லவேண்டும். சிங்கப்பூர்ப் பென்ஷன்காரர் என்றால் இங்கேயுள்ள கற்றவர்களெல்லாருக்கும் சிரிப்பு. என்ன இவர்களெல்லாரும் அந்தக் காலத்தில் ஆங்கில பாடசாலைகளிற் பெயரைக் கொடுத்துவிட்டுத் தெருத் தெருவாய்த் திரிந்தவர்கள்தானே. மூன்றும் வகுப்பு ஆங்கிலந்தானுங் கற்றவர்களா? இந்த உதவாக் கரைகளைக் கண்காணுத தேசத்துக்கு அனுப்பிவிட்டு இவர்களின் தொல்லை ஒழிந்தாலே போதும் என்று இவர்கள் பெற்றோர் எண்ணிக்கொண்டு உபாத்தியாயருக்கு ஒருகட்டுப் புகையிலையோ, நூறு மாம்பழமோ ஐம்பது முட்டையோ கொடுத்துப் பையன் ஏழாம் வகுப்புச் சித்தியடைந்தவன் என்று' பொய்யாய் அவரிடம்சேட்டிப்பிக்கெட்பெற்று மலாயாவுக்கு அனுப்பப்பட்டவர்கள்தானே! "ஐ கம், யூ சிற்றிங் சேர்" என்று மாத்திரம் இங்கிலிஷ் சொல்லக் கூடியவர்கள் அல்லவா. இவர்களுக்கு நூறு இருநூறு என்று என்ன பென்ஷன் வேண்டியிருக்கு என்று உங்கள் சிங்கப்பூர்ப் பென்ஷன்காரர்களைப் பற்றி இவர்கள் கேலி பண்ணிச் சிரிப்பதுண்டு. இவர்கள் எதையும் சொல்லிச் சிரிக்கட்டும், ஆனால் நான் கேட்கின்றேன் நல்லதோ கெட்டதோ எந்த வகையாகவோ மாதாமாதம் நூறு இருநூறு என்று பென்ஷன் வர வழி தேடிக்கொண்ட அவர்கள் மலாயா பறிபோனதும் தங்கள் பென்ஷனைப் பற்றிக் கவலை கொண்டது நியாயமா இல்லையா என்று. அநேகர் பென்ஷன் நிச்சயம் போயே போய் விடும் என்று ஏங்கி இடிவிழுந்து போய்க் கிடந்தார்கள். இவர்கள் பயத்தைக் கண்ட சில காலிகள்வேண்டுமென்றே "இந்த மாதம் தொடங்கிச் சிங்கப்பூர்ப் பென்ஷன்கூட நின்றுவிடப் போகின்றதாம்" என்று வம்புக் கதைகளைக் கட்டிவிட்டு இவர்கள் வயிற்றெரிச்சலைக் கூட்டிவிட்டுக் கொண்டும் வந்தார்கள். இதை அறிந்தோ என்னவோ தெரியாது இலங்கை அரசினர் "நீங்கள் ஏன் பயப்படுகின்றீர்கள், உங்கள் 'பென்ஷனை' ஒருபோதும் நிறுத்திவிடவே மாட்டோம், எங்களில் உங்களுக்கு நம்பிக்கை யில்லாவிட்டால் இருந்தாருங்கள் இன்னுங் கொஞ்சம் கூட" என்று சொல்பவர்களைப் போலச் சிங்கப்பூர்ப் பென்ஷன் காரருக்குக்கூட, அவர்கள் பென்ஷனைவிட அலவன்சும் கூட்டிக்கொடுத்து வந்தார்கள்.

கடைசியாக உங்களுக்குச் சொல்லுகின்றேன்; இலங்கையில் வாழ்க்கைச் செலவுகள் ஒன்றும் இன்னும் குறையவில்லை. கள்ள மார்க்கெட்டுகள் இன்னும் ஜாரூராக வேலை செய்கின்றன. இந்த நிலைபரம் இன்னும் நீடித்திருக்கும் போலிருக்கின்றது. இப்போது திரிசங்கு சொர்க்கம் போல் உங்களாட்களின் கதி வந்துவிட்டது. நீங்கள் பணமனுப்புவீர்கள்தானேயென்று அரசினரும், அரசினர் உதவி செய்கின்றார்கள்தானேயென்று நீங்களும் எண்ணிக்கொண்டிருந்துவிட்டால் அவர்களைப் பார்த்து [illegible] சிரிக்கும். ஆகையால் இனி [illegible] பற்றிக் கவனமெடுங்கள்.

ஒவ்வொரு தாயும் வுட்வார்ட்ஸ் கிரைப் வாடரின் சிறந்த குணத்தை அறிவாள். அது குழந்தைகளைக் காப்பாற்றுகிறது

WOODWARD'S GRIPE WATER

keeps baby well

HVW.108-TH.TAM W. WOODWARD LTD. LONDON


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 1176

ஈவினை

சின்னயா வயித்திலிங்கம் (யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 414-ம் இலக்க மரணசாதனத் தத்துவவழக்கில் தத்துவகாரன் என்ற முறையில்)

வழக்காளி

ஈவினை

தம்பர் அளகரத்தினம் கைம்பெண் வள்ளியம்மை (காலஞ்சென்ற தம்பர் அளகரத்தினத்தின் ஆஸ்திக்குப் பிரதிகாரியஸ்தராகவும்)

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 1176-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஆறு துண்டுக் காணிகளை, 1946-ம் ஆண்டு மாசி (பெப்ரவரி) மாதம் 9-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:-** முதல் வட்டி ரூபா 2091-66-ம் இதற்கு 28-1-44 திகதி தொடக்கம் 10-5-44 திகதி வரைக்கும் 100க்கு 9 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 9 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 259–70½ சதம்.

### காணிகளின் விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி மல்லாகக் கோவிற்பற்று ஈவினையிறை "கோணப்புலம்" நிலைப்பரப்பு 18-ம் வடலிகளும், எல்லைகளில் நிற்கும் வேம்பிற் பங்கும், எல்லை: கிழக்கு, தாமர் தம்பருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். வடக்கு, தம்பர் பெண் சின்னத்தங்கத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கும், தெற்கும், முருகர் கந்தையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் ஐந்தில் ஒருபங்கும் (1/5ம்) வடக்கெல்லையில் இருக்கும் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்காலும்.

(2) மேற்படி ஈவினை யிறை "கோணப்புலம்" நிலைப்பரப்பு (58-ம்) எல்லை : கிழக்கு, சிதம்பரி பெண் வள்ளியம்மைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும், ஒழுங்கையும், வடக்கு, தம்பர் பெண் சின்னத்தங்கத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு, நாகமுத்து பெண் வள்ளியம்மைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். தெற்கு, பொன்னையா பெண் தங்கப்பிள்ளைக்கும் பங்காளருக்கு முரிய ஆதனம். இதில் சொரியலாய் நிலைப்பரப்பு இரண்டில் (2-ல்) சொரியலாய் ஐந்தில் ஒருபங்கு (1/5).

(3) மேற்படி ஈவினை யிறை "உயில்ஒல்லை" நிலைப்பரப்பு 4 5 3/8-ம் கிணறும் செய்பயிர்களும் எல்லை: கிழக்கு, அரியகுட்டி பெண் அன்னத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு, ஒழுங்கை. மேற்கு, காலடிப் பாதை. தெற்கு, தம்பிப்பிள்ளை கதிரிப்பிள்ளைக்கும் தாமர் தம்பருக்குமுரிய ஆதனங்கள். இவ்வெல்லைக்கு உட்பட்டவைகளிற் சொரியலாய் பதினைந்தில் இருபங்கு(2/15) ம்அதற்குரியவைகளும்.

(4) மேற்படி ஈவினை யிறை "நெடுங்கேணி" நிலைப்பரப்பு 20 5/8-ம் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை: கிழக்கு, இளையதம்பி பெண் கதிராசிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு, முருகர் பெண்ஐயாத்தையின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு, கதிரவேலு தம்பிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு, அப்பாசி பெண் குட்டிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இவ் வெல்லைக்குட்பட்டவைகளிற் சொரியலாய் பத்தில் ஒருபங்கும் (1/10-ம்) தெற்கெல்லைக்காணிக்குள் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும், வழியும் வாய்க்காலும்.

(5) மேற்படி ஈவினை யிறை "ஆண்டிசீமா" நிலைப்பரப்பு( 2½)ம் எல்லை : கிழக்கும், வடக்கும், மேற்கும் பொன்னையா பெண் தங்கமுத்துவின் ஆதனங்கள். தெற்கு, நாகமுத்து பெண் வள்ளியம்மையின் ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளிற் சொரியலாய் முப்பதில் ஒரு பங்கு (1/30).

(6) மேற்படி புன்னாலைக்கட்டுவனிறை "உயப்பன் கலட்டி" நிலைப்பரப்பு (45)-ம் எல்லை: கிழக்கு, சின்னத்தம்பி பெண் நன்னிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு, வல்லிபுரம் பெண் தெய்வானைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு, சங்கரப்பிள்ளை கிருஷ்ணரின் ஆதனம். தெற்கு, சுப்பையா சின்னையாவின் ஆதனம். இதில் சொரியலாய் அறுபதில் ஒருபங்கு (1/60)-ம் அதற்குரியவைகளும்

முற்பதிவு: H 102/28; H 77/33; H 153/231; H 154/93 ம், 95ம் H 153/232.

Sinnathamby Sangarappillai
சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை
11-1-46

## ORDER NISI

*In the District Court of Jaffna*

In the matter of the Last Will of the late Kanaganayagiammal wife of M. Rasanayagam of Tellippalai East

*Deceased*

*Testamentary Jurisdiction* No. 501

Rasammah widow of Kanagasundaram of Tellippalai East

*Petitioner*

*Vs.*

1. Kanagasundaram Rasanayagam
2. Kanagasundaram Singanayagam both of Chunnakam

*Respondents*

This matter coming on for disposal before R. R. Selvadurai Esquire District Judge Jaffna on the 30th. day of November 1945 in the presence of Mr. T. Kumaraswamy Proctor on the part of the petitioner and on reading the affidavit and petition of the petitioner.

It is ordered that the Last Will of the abovenamed deceased dated 18th. August 1945 and deposited in Court be declared proved and the petitioner be declared entitled to probate of the same and that the same be issued to her accordingly unless the abovenamed respondents or any other person shall on or before the 18th. day of January 1946 appear before this court and show sufficient cause to the satisfaction of this court to the contrary.

This 14th. day of December 1945

(*Sgd*) A. V. Kulasingam
Acting District Judge

(2957-ii)

## 197-வது புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

130-வது புடவைக் கட்டுப்பாட்டுக் கட்டளையில் குறிக்கப்பட்டுள்ள விசேஷ கூப்பன்கள் இனிமேற்பட்டு பிரதம உதவிப் புடவைக் கட்டுப்பாட்டதிகாரிக்காக தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த அலுவலக அதிகாரி திரு. டபிள்யு. ஜே. எவ். மென்டிஸ் அவர்களால் ஒப்பம் இடப்படுமென வியாபாரிகட்கு இத்தாலறிவிக்கப்படுகின்றது.

2. வியாபாரிகள் இதன் பின்பு ஓர் பிரதம உதவிக் கட்டுப்பாட்டதிகாரியின் அல்லது பிரதம உதவிக்கட்டுப்பாட்டதிகாரிக்காக திரு. மென்டிஸ் அவர்களின் ஒப்பம் உடைய விசேஷ கூப்பன்களை ஏற்றுக்கொள்வார்களாக.

எம். எவ். டீ. யெஸ். ஜயரட்ன
பதிற்புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 8-1-46 [2603]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சிறு கதை

# அந்தக் காலம்

சு. இராஜநாயகம்

"அண்ணு வரவில்லையா?" என்ற ஒரு பெண்ணின் சப்தங் கேட்டுத் திரும்பினுன் சந்திரநாதன்.

நதியின் சலசலப்பிலும், அழகிலும், மாலைக் காற்றின் ஸ்பர்சத்திலும் மெய்மறந்து போயிருந்த அவன், நதிதான் அவள் உருவில் வந்து காட்சி அளிக்கிறதோ என எண்ணினுன்.

"அண்ணுவா? யார், எனக்குத் தெரியவில்லையே!" என்ருன்.

"அவர்தான், என் அண்ணு ஸ்வாமிநாதன்" என்ருள் அவள்.

"ஆஹா! நீ அவனது சகோதரியா? நீ தினமும் நதிக்கு வரும்போது உன்னை யாரோ என்று எண்ணினேன். ஸ்வாமியைக் காணவில்லையே, எங்கு போயிருப்பான்?" என்ருன் சந்திரநாதன்.

"தெரியவில்லை, நீங்கள் தனியாக இருக்கிறீர்கள் என்றுதான் கேட்டேன்! நான் போகவேண்டும்" என்று கூறிவிட்டு நீர்க் குடத்துடன் திரும்பினுள். போகும்போது அவனைப் பார்த்துப் புன்னகை பூத்தாள். சந்திரநாதனுடைய இருதயம் மலர்ந்தது.

* * *

சந்திரநாதன் ஒரு புதுப்பிறவி. பிரகிருதியின் புதியமொட்டு. "பெண்கள் விடுதலை அவசியம், அவர்களுக்குச் சமத்துவங் கொடுக்க வேண்டும்" என்று கர்ச்சிப்பான். "கேவலம் மிருகங்களைப் போன்று, உணர்ச்சியற்ற மனிதர் பலர் 'காதலர்' என்று கூறிக் கன்னித் தெய்வங்களை அவமதிக்கிருர்கள். காதல் என்ருல் என்ன? அன்புதானே! ஆகவே சரீர சம்பந்தமான அன்பை மட்டும் மடையர்கள் வேண்டுவதேன்? சகோதரத்துவத்துடன் கூடிய அன்பை வேண்டினுல் என்ன?" என்று முழங்குவான்.

## 2

சந்திரநாதனும் ஸ்வாமிநாதனும் அன்னியோன்னியமானவர்கள். சந்திரநாதனுடைய தந்தையார் வேலை மாற்றலாகி, ஸ்வாமிநாதனுடைய கிராமத்தில் வசிக்க நேரிட்டது.

ஸ்வாமிநாதனுக்குத் தாயோ, தந்தையோ இல்லை. போதிய சொத்தை விட்டுவிட்டு இறந்துவிட்டனர். அவனுக்கும் அவன் சகோதரி கல்யாணிக்கும் துணை அவர்கள் பாட்டிதான். வெளியூரிற் சில பந்துக்களும் இருந்தார்கள்.

ஸ்வாமிநாதனுடைய ஊருக்குத் தகப்பனுருடன் வந்த சந்திரநாதன், அங்கே உள்ள கல்லூரியில் தனது படிப்பை மேற்கொண்டான். ஸ்வாமிநாதனும் சந்திரநாதனும் ஒரேவகுப்பு. இருவரும் ஒரே தன்மையான கொள்கையுடையவர்கள். நட்பு வளர்வதற்குத் தடை ஏது?

மாலைவேளைகளில் நதிக்கரையில் இருவரும் உட்கார்ந்து சம்பாஷிப்பார்கள். அப்பொழுதெல்லாம் ஸ்வாமிநாதனுடைய சகோதரி-கல்யாணி குடத்துடன் நதிக்கு வருவதுண்டு. கல்யாணி ஸ்வாமிநாதனுடைய சகோதரி என்று முதலில் சந்திரநாதனுக்குத் தெரியாது.

கல்யாணியைச் சந்திரநாதன் அறிந்துகொண்டபிறகு அவளைக் காணும்போதெல்லாம், அவளது குழந்தையுள்ளத்தைப் பிரதிபலிக்கும். ஒளிவீசும் கருவிழிகள் பாரதியின் "சுட்டும் விழிச்சுடர்தான்" ஞாபகத்தை அவனுக்கு உண்டு பண்ணும். அவர்களது அன்பை வளர்ப்பதற்கு இடையிடையே சில சம்பாஷணைகள் படர்கொடியாயிருந்தன. சந்திரநாதன் கல்யாணியை, "கல்யாணீ!" என்பான் அன்பொழுக. "அண்ணு" என்பாள் கல்யாணி.

## 3

சந்திரநாதனும் ஸ்வாமிநாதனும் நதிக்கரையிலிருந்து வந்துகொண்டிருந்தார்கள். இன்றுதான் சந்திரநாதன் ஸ்வாமிநாதனுடைய இல்லத்துக்கு வருகின்ருன். நண்பர்களின் மகிழ்ச்சிக்குக் கேட்பானேன்?

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்" என்ற பாரதிபாடலின் ஈற்றடி கல்யாணி இராகத்தின் உச்ச ஸ்தானத்தில் மிதந்துகொண்டிருந்தது. அந்தக் கானவெள்ளத்தில் மனத்தை மிதக்கவிட்ட சந்திரநாதன் பதுமைபோல் வீட்டினுள் காலை எடுத்துவைத்தான். உள்ளே கல்யாணிதான் பாடிக்கொண்டிருந்தாள் என்று சந்திரநாதன் உடனே அறிந்துகொண்டான். சந்திரநாதனைக் கண்டதும் கல்யாணி பாடுவதை நிறுத்திக்கொண்டாள்.

"ஏன் பாடுவதை நிறுத்திக் கொண்டாய்?" என்ருன் சந்திரநாதன்.

"..................."

"தொடர்ந்து பாடாமல் நிறுத்திக்கொள்வதுதான் வழக்கமோ?"

"இல்லை, பாடுகிறேன், ஆனுல் நாங்கள் இன்னும் எங்கள் விருந்தாளியை உபசரிக்கவில்லையே!"

"உங்கள் விருந்தாளியான பாக்கியசாலி யார்?"

"எங்கள் விருந்தாளி பாக்கியசாலியோ என்னவோ, ஆனுல் அவரை விருந்தாளியாகப்பெற்ற நாங்கள் பாக்கியசாலிகள்தான்"

கல்யாணியின் முகத்தில் வெற்றியின் சின்னமாகப் புன்முறுவல் ஒன்று தோன்றிற்று.

"வெற்றி எவருடையதாயினும் பெருமை மட்டும் என்னுடையதே" என்ருன் சந்திரநாதன் விட்டுக்கொடாமல்.

சந்திரநாதனும் ஸ்வாமிநாதனும் சிற்றுண்டி அருந்திக்கொண்டிருந்தனர். இருவருக்கும் 'காப்பி' கொண்டுவந்த கல்யாணி குறும்பாக 'அண்ணு' என்ருள்.

ஒரு முகமாகத் திரும்பிப் பார்த்த இரண்டு 'அண்ணு'க்களும் கல்யாணியின் குறும்புத் தனத்தைக் கண்டு நகைத்தனர்.

விருந்து முடிந்தது. விருந்தாளியும் உவகையுடன் வார்த்தையாடிக்கொண்டிருந்தான். சம்பாஷணைகள் ஒரு முடிவை அடைந்தன. சந்திரநாதன் எழுந்தான். ஸ்வாமிநாதனும்எழுந்துநின்ருன்.

"கல்யாணீ,போய்வருகிறேன்" என்று விடைபெற்றுக்கொண்டான் சந்திரநாதன்.

"அடிக்கடி உங்கள் திருஷ்டி இப்பக்கத்தில் விழட்டும்!" என்ருள் கல்யாணி.

"தாராளமாய்" என்று கூறியபடியே சந்திரநாதன் படிக்கட்டுகளைக்கடந்து அப்பாற்சென்ருன்.

## 4

"கூடப்பிறந்தால் மட்டுந்தானு சகோதரியும் சகோதரனும்?" என்று சொல்லிக்கொண்ட சந்திரநாதனுடைய திருஷ்டி ஸ்வாமிநாதனுடைய வீட்டில் அடிக்கடி விழுந்துகொண்டுதானிருந்தது.

வருஷம் ஒன்றுகழிந்தது. கல்யாணியின் பிறந்த தினத்திற்குச் சந்திரநாதனும் அழைக்கப்பட்டான். மாலையிற்ருன் விருந்து. ஆனுல் காலையிலேயே சந்திரநாதன் வரவேண்டும் என்பது கடின வேண்டுகோள்.

சந்திரநாதன் காலையில் அங்கு சென்ருன். அவன்போன சமயத்தில் ஸ்வாமிநாதன் வெளியிற் சென்றிருந்தான். யாரோ இரண்டொருவர் மூலைக்கொருவராய் ஏதோ செய்துகொண்டிருந்தார்கள். கல்யாணி இரண்டொரு தடவை வெளியே வந்தாள். தன்னைக் கண்டு கல்யாணி ஒரு வார்த்தைதானும் கூருதது, சந்திரநாதனைச் சுவர்க்கத்தில் இருந்து பாதாளத்தில் வீழ்த்தியதுபோலிருந்தது. கல்யாணியினிடத்துக் காணப்பட்ட வாட்டம் சந்திரநாதனுக்குப் புலனுகாத புதிராகக் காணப்பட்டது.

சந்திரநாதனுடன் சம்பாஷிப்பதற்காகச் சந்தர்ப்பங்களை வருவித்துக்கொள்ளும் கல்யாணி, இன்று சந்தர்ப்பங்கள் தாமாகவே கிடைத்தபோது சம்பாஷிக்கவில்லை என்ருல் சந்திரநாதனுக்குத் தலைவலிக்காமல் வேறென்ன தான் செய்யும்?

ஸ்வாமிநாதன் வந்ததும் தலைவலி என்று சாக்குச் சொல்லி வீட்டிற்குத் திரும்பினுன். ஸ்வாமிநாதன் பலமுறை வேண்டியும் சந்திரநாதன் பிடிவாதஞ் செய்தான். அங்கே தங்குவது அரைக்ஷணமேனும் சகிக்கமுடியாத வேதனையாகப்பட்டது சந்திரநாதனுக்கு. உணவுகொள்ளவும் மறுத்துவிட்டான்.

சந்திரநாதன் போய்விட்டான்! 'காப்பி' கூடக் கொடுத்து உபசரிக்கவில்லை! ஸ்வாமிநாதன் சமயத்தில் இருந்தாலாவது உபசரித்திருப்பான். கல்யாணி "காப்பி எடுத்துக்கொள்ளுகிறீர்களா?" என்ற மூன்றுவார்த்தைகளைத்தானும் கேட்டாளா?

இவற்றையெல்லாம் எண்ணிக் கல்யாணியின் உடைந்த உள்ளம் உருகிக்கொண்டிருந்தது.

## 5

இரண்டு தினங்கள் கழிந்தன. சந்திரநாதனைக் கல்யாணி நதிக்கரையில் சந்திக்க நேர்ந்தது. சந்திரநாதனது கண்கள் திறந்தபடிதானிருந்தன. ஆனுல் அவனது திருஷ்டியில்ஏதாவது பட்டதாகத் தெரியவில்லை.

கல்யாணி "அண்ணு!" என்ருள்.

சந்திரநாதனின் மௌனம் கலையவில்லை.

மறுபடியும் "அண்ணு!" என்ருள் கல்யாணி. சிந்தனுலோகத்திலிருந்த சந்திரநாதனின் கண்கள் கல்யாணியை நோக்கின. சடுதியில் ஏற்பட்ட ஒருவித உணர்ச்சியால் அவனது உடலில் இரத்தோட்டம் அதிகப்பட்டதை அவனது கண்கள் ஸ்பஷ்டமாகத் தெரியப்படுத்தின.

"கல்...யாணியா?" என்று அவனை அறியாமலே அவனது வாய் கூறிற்று.

"ஆம், நான் உங்களை இரண்டு தினங்களாக இங்கே தேடினேன். உங்களைக் காணவில்லை. அன்றைக்கு நீங்கள் உணவு கொள்ளாமற் சென்றதை எண்ணி எண்ணி எனது இருதயம் வெடித்துவிடும் நிலைமையில் இருந்தது. இப்பொழுது உங்களைச் சந்தித்ததால் அந்நிலைமையில் சிறிதளவு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அண்ணு! உங்கள் வாட்டத்திற்குக் காரணம் பாவி நான் தான். அதையிட்டு உங்களிடம்......

கல்யாணியின் நயனங்களிலிருந்து தொடர்ந்தாற்போல் பல முத்துக்கள் உதிர்ந்தன.

சந்திரநாதனும் உணர்ச்சி உள்ளவன் தானே? அவனது கண்களிலிருந்தும் கண்ணீர் வடிந்தது. அதைக் கல்யாணி கண்டுவிடுவாளோ என்று முகத்தை மறுபக்கம் திருப்பிய சந்திரநாதன், தூரத்தில் ஸ்வாமிநாதன் வந்துகொண்டிருப்பதைக் கண்டான்.

அவசரமாகக் கண்களைத் துடைத்துக்கொண்ட சந்திரநாதன், "கல்யாணீ! அண்ணு வருகிருன். அழவேண்டிய அவசியம் என்ன?......நானும் தகப்பனுரும் நாளைக்கு எங்கள் கிராமத்துக்குப் போகிறேரும். நிகழ்ந்தவற்றை இனிமாற்றி அமைக்க முடியாது. நிகழப் போவதையிட்டுச் சிந்தனைசெய். என்மேற்ருன் தப்பு முழுவதும். அதற்காக என்னை மன்னித்து விடு. உன்னிடம் விடைபெற்றுக் கொள்ளுகிறேன்." என்று கூறிவிட்டுப் பதிலை எதிர்பாராமலே ஸ்வாமிநாதனைநோக்கி விரைவாகப்போய்விட்டான்.

## 6

மறுதினம் சந்திரநாதன் தந்தையாருடன் தனது ஊருக்குப் போய்விட்டான். ஸ்வாமிநாதனுடைய கிராமத்திலிருந்து சந்திரநாதனுடைய கிராமம் சுமார் முப்பது மைல். ஸ்வாமிநாதனும் அவர்களுடன் சென்று இரண்டு தினங்கள் தங்கிவிட்டுத் திரும்பினுன்.

அடுத்தவாரத்தில் சந்திரநாதனுக்கு, கல்யாணியிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது. கடிதத்தில் காணப்பட்ட வார்த்தைகள் ஒரு சில என்பது உண்மைதான். ஆனுல் அச்சில வார்த்தைகளின் சக்தி மட்டும் மிக அதிகம்.

கடிதம் இது தான்:

அண்ணு!

கண்களை மூடிக்கொள்ளும் சமயங்களில் எல்லாம் எனது மனக்கண்களில் தோற்றுவது தங்கள் தோற்றந்தான். என் உடைந்த இருதயத்தை மட்டும் உடலில் இருந்து பிரிக்க முடியுமானுல், அதை நிச்சயமாக உங்கள் பார்வைக்கு அனுப்பியே தீருவேன். "கல்யாணீ! மன்னித்தேன்" என்ற இரண்டு வார்த்தைகளை மட்டும் ஒரு கடிதத்துண்டில் எழுதி அனுப்பிவிடுங்கள். எனது நன்றி — கல்யாணி.

கடிதத்தில் காணப்பட்ட ஒவ்வொரு வார்த்தையும் சந்திரநாதனை நிலைகுலையச் செய்தது. சாதாரண வேளையிலெனில் கணக்கிலடங்காத கடிதங்கள் எழுத அவனது கைகளே முனைந்து நிற்கும். ஆனுல் இன்று அவனது மனப்பான்மை கடிதம் எழுதுவதற்குக் குறுக்கே நின்றது. அவன் பதில் எழுதவில்லை.

ஐந்து நாட்கள் கழித்து மற்றும் ஒரு கடிதம் சந்திரநாதனுக்குக் கிடைத்தது.

"அண்ணு,

எனது வேண்டுகோளைத் தாங்கள் நிராகரித்து விட்டீர்களா? எனது மனச் சாட்சிக்கு விரோதமாக, நான் தங்களோடு சம்பந்தப்பட்ட மட்டில் ஒன்றும் செய்யவில்லை. நான் என்னை அறியாமல் ஏதாவது தவறு செய்திருந்தாலும் அவற்றிற்காக என்னை மன்னியுங்கள். அன்று, எனது பிறந்த தினத்தன்று நீங்கள் வந்து திரும்பிப் போனபோது எனது மனம் அலையிடப்பட்ட துரும்புபோல இருந்தது. கிராமத்திலிருந்து வந்திருந்த எனது மூட பந்துக்களில் ஒருவரினது கடினமான கட்டளையினுல், அன்று நான் உங்களுடன் சம்பாஷிக்கவோ,

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)






—இதற்குப் பதிலாக வாங்குவதற்கு எவ்வளவு செலவாகுமென யோசித்துப் பாருங்கள்

இப்போது ஆடைகள் விற்கும் விலையில் வண்ணுனை ஆடைகளைத் தோய்த்துப் பொத்தல்களை உண்டாக்கவிடுவது, பணத்தை வீண் விரயஞ் செய்ததுபோலாகும். இவ்விதமாக முரட்டுத்தனமாய் நாசமுண்டாக்கக்கூடிய முறையில் ஆடைகளை வெளுக்கவேண்டியதில்லை. சன்லைட் சோப்பினுல் ஆடைகளிலிருந்து மிருதுவாக அழுக்கை நீக்கிவிடலாம். சன்லைட்டில் சுய ஆற்றலுள்ள நுரையிருக்கின்றது. அதனுல் நூலிழைகளைப் பாதிக்காதவாறு அது அழுக்கைத் தூக்கி எடுத்துவிடுகிறது. சன்லைட் முறையில் ஆடைகளை வெளுக்க இன்றே ஆரம்பியுங்கள்; அதனுல் உங்கள் ஆடைகளை நீடித்து நிற்கச் செய்யுங்கள்.

**உங்கள் வேலைக்காரனுக்குச் சன்லைட் சோப்பை உபயோகித்துப் பணத்தை மிச்சப்படுத்தும் முறையைக் கற்பியுங்கள்.**

1. ஆடைகளைத் தண்ணீரில் நன்ருக ஊற வையுங்கள்.
2. ஆடைகள்மீது—அழுக்குப் படிந்த இடத்தில் மேலதிகமாக — சன்லைட்டை நன்ருகத் தேய்க்கவும்.
3. சோப் ஆடைகளுள் செறியும்படி மிருதுவாகத் தப்புதல்வேண்டும். அவைகளை அடிக்க வேண்டாம். சன்லைட்டின் 'சுய ஆற்றலுள்ள' நுரை அழுக்கை இழக்கி எடுத்துவிடுகிறது.
4. நன்ருக அலசிக் கழுவவும். இப்பொழுது அழுக்கு சன்லைட் நுரையிலேயே இருக்கிறது. ஆனபடியால் எல்லாவற்றையும் அலசிக் கழுவி வெளியேற்றவும். நன்ருக அழுக்கடைந்தஆடைக்குக் இன்னெருமுறை சோப் போடவேண்டும்.




சன்லைட் சோப்
ஆடைகளைப் பாதுகாக்கிறது

S. 71-169

LEVER BROTHERS (CEYLON) LIMITED


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NATIONALIST TAMIL WEEKLY

# THE EELAKESARI

Largest and most Influential Circulation in Ceylon & India

Vol. 16 | Chunnakam, Sunday Jan., 20, 1946 | No. 25

# அந்தக் காலம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

உங்களை உபசரிக்கவோ முடிய வில்லை. வயது வந்த பெண்கள் ஒரு ஆணுடன் சம்பாஷிக்கக் கூடாது என்பது அம்மூடாத்மா வின் கொள்கை. அண்ணுவும் சமயத்தில் இல்லாது போனது என்ஞல் சகிக்கமுடியாததாகிவிட் டது. அண்ணு, எனது இருதயம் நல்ல நிலைமையை அடைவதற் குத் தங்களிடம் தான் ஔஷ தம் இருக்கிறது. "மன்னித் தேன்" என்று ஒரு வார்த்தை எழுதி அனுப்புங்கள். எனது அஜாக்கிரதையால் ஏற்பட்ட பெருநெருப்பைத் தணிக்கக்கூடி யது தங்கள் ஒரே ஒரு வார்த்தை தான். அந்த ஒரு வார்த்தையை மட்டும் எழுதி அனுப்பி விடுங் கள் — கல்யாணி—என்றிருந்தது கடிதம்.

சந்திரநாதன் பதில் எழுத எண்ணிஞன். ஆஞல் எழுத முடியவில்லை. சந்திரநாதன் நேரிலே சம்பாஷிப்பதை விரும்பி ஞன். ஆகவே அவன் ஸ்வாமி நாதனுடைய கிராமத்துக்குப் போகத் தீர்மானித்தான்.

## 7

கல்யாணியின் வீடு அந்தத் தெருவின் ஒரு கோடியில் இருக் கிறது. தெருவின் இந்தக்கோடி யில் கால்களை வைக்கும்போதே சந்திரநாதனுடைய நெஞ்சு உலர்ந் துபோயிற்று. எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடிக்கும், அவனது இருதயத் துடிப்பு அதிகரித்தது. கல்யாணி வீட்டு வாசலில் போன போது வீசிய மந்தமாருதம் கூடச் சந்திரநாதனுக்கு வெப்பமாக இருந்தது.

கல்யாணி குறிப்பிட்டிருந்த மூடாத்மா தனது கிராமத்துக்குப் போய் விட்டதைச் சந்திரநாதன் முன் கூட்டியே அறிவான். அவன் வீட்டினுள் நுழைந்த போது கல்யாணி மேஜையருகில் ஏதோ யோசித்தவண்ணம் உட் கார்ந்திருந்தாள். ஸ்வாமிநாதன் வெளியே சென்றிருந்தான்.

சந்திரநாதன், "கல்யாணி! அண்ணுஎங்கே போய்விட்டான்"? என்ருன் தீனமான துவனியில். சந்திரநாதனைக் கண்டதும், முன்பே சுருதி சேர்த்து வைத் திருந்த கல்யாணியின் கண்கள் தமது ஆர்வத்தனத்தை ஆரம் பித்து விட்டன.

இதைச் சந்திரநாதனுல் சகிக்க முடியவில்லை.

"ஏனம்மா அழுகிருய்? என்னை மன்னிக்க முடியாதென்ரு? என் னை, இப்பாவியை மன்னித்து விடு. கல்யாணீ! இதோ, நீ முன்பு என்னிடம் கேட்ட புஸ்த கம் இருக்கிறது. இதை வாங்கிக் கொண்டு என்னை மன்னித்துவிடு" என்ருன் விம்மலுடன்.

நீண்ட ஒரு மௌனத்தைச் சந்திரநாதன் தான் கலைக்க வேண்டி நேரிட்டது.

"கல்யாணி! இப் புஸ்தகத்தை உனது கைகளால் வாங்கிக் கொண்டு என்னை க்ஷமித்து விடு" என்ருன்.

"கைகளால் வாங்கிக்கொள் ளும் அந்தக் காலம் போய்விட் டது! இப்பொழுது கடிதத்துக் குப் பதில் எழுதாத காலம் அல் லவா நடக்கிறது?"

இவை கல்யாணியின் விம்மலு டன் கலந்து வந்த வார்த்தைகள்.

"கல்யாணி! நான் சொல்வதைக் கேள். பிறகு........."

"முதலில் இதைமட்டும் சொல் லுங்கள். எனது கடிதத்தைப் பெற்றுக்கொண்டீர்கள் தானே?"

கல்யாணி இதைக் கேட்டு முடிப்பதன் முன்னர் தெருவிலே ஸ்வாமிநாதன், தனது நண்பன் ஒருவனை அழைத்துக் கொண்டு வருவது தெரிந்தது. இரண்டு உள்ளங்களின் பிணக்குகள் அறுக் கப்படும் சமயத்தில் கூட அதற்கு ஒரு இடையூறு!

சம்பாஷணை நின்று விட்டது. மனப்புயல் மட்டும் ஓயவில்லை.

* * *

சந்திரநாதனுடைய உள்ளம், "கைகளால் வாங்கிக்கொள்ளும் காலம் மட்டும் தானே போய்விட் டது? அன்பு உரிமை கூடப் போய்விட்டதா? அவை போக முடியாது. போய் முடிந்த அந்தக் காலம் கூடத் திரும்பி வரத்தான் செய்யும்" என்று கூறிற்று.

"துரதிர்ஷ்டத்தால் நேர்ந்த சில அசந்தர்ப்பங்கள், ஒன்று மில்லாத சிறுவிஷயத்தை எவ் வளவு பெரிதாக வளர்த்துவிட் டன! இந்தக் கொடிய காலப் போக்கைச் சித்திரவதை செய் தால் கூடப் பாதகமில்லை. இப் பொழுதுதான் என்ன போய்விட் டது? அவர் என்ன உணர்ச்சி அற்றவரா?" என்றது கல்யாணி யின் உள்ளம்.

"இரண்டு உள்ளங்களின் கூற் றும் நியாயமானவைதான்" என்று ஒலிப்பதுபோன்றிருந்தது, தூரத் திற் செல்லும் நதியின் சலசலப்பு.

## புது வருடத்திற் புது அரசியல்

நம் நாட்டிற்குப் புது அரசி யல் திட்டம் வருவதுபோல் நமது விடுதியிலுள்ள அரசிய லும் புதுமாற்றங்கள் ஏற்பட வேண்டுமென்று சென்ற 11-1-46 வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற தேர்தற் கூட்டத் திலே ஸ்ரீமத் சுவாமி நடராஜா னந்தஜீ அவர்கள் தமது தலை மைப் பேருரையில் குறிப்பிட் டார். அதன்படி கீழ்க்காணப் படும் உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர். திரு. V. சிவ ரத்தினம் — பிரதமமந்திரி; திரு. M. தில்லையம்பலம் — உதவி பிரதமமந்திரி; திரு. K. A. மூர்த்தி — பாராளுமன்ற லிகிதர்; திரு. K. சங்கரப்பிள்ளை—பாராளு மன்றத் தலைவர்; திரு. G. N. சாமி — உணவுக்கட்டுப்பாட்டதி காரி; திரு. K. சாமிநாதன் — விழா மந்திரி (CEREMONEY) திரு. S. செல்வநாயகம் — உள் நாட்டுமந்திரி; திரு. L. நடராசா - சுகாதாரமந்திரி; திரு. A. சுந்தா லிங்கம்— விவசாய மந்திரி.

தேர்தலின்பின் புதுவருடத் துடன் அரசாங்கசபை என்னும் பெயர் ஒழித்து, பாராளுமன்றம் 'சிவானந்த வித்தியாலய மாண வர் இல்லப் பாராளுமன்றம்' என்ற பெயருடன் விளங்குகி றது.

## தேகவியோகம்

### ஸ்ரீமதி றெபெக்கா தம்பர்

காலஞ்சென்ற திரு. G. W. தம்பர் அவர்களின் பத்தினியார் ஸ்ரீமதி ஜேன் றெபெக்கா அவ ர்கள் இம்மாதம் 5உ இவ்வுலக வாழ்வை நீத்தனர். இவர் ஸ்ரீமான்கள்: A. E. தம்பர், H. R. T. தம்பர் அவர்களின் தாயா ராவர். அம்மையாரின் ஆன்மா சாந்தியடைவதாக.

## விசேஷ விளம்பர வசதி

எமது பத்திரிகையில் 10 போயின்ற் (10 pt.) எழுத் துக்களில் அடங்கக்கூடிய தாக, 5 வரிகளுக்குக் குறை யாமலும் 15 வரிகளுக்குக் கூடாமலும் பிரசுரிக்கப்படும் சிறிய விளம்பரங்கள்— தேவை, தவறவிடப்பட்ட பொருள், பிறப்பு, இறப்பு முதலியன—வரி ஒன்றுக்கு =/25 சதம் வீதம் பிரசுரிப் பதற்கு விசேஷ வசதி ஏற்ப டுத்தப்பட்டிருக்கிறது. இச் சலுகை ஈழகேசரிச் சந்தா தாருக்கே யுரியது.

பிரசுரத்திற்காக அனுப்பப் பெறும் எவ்விதமான விளம் பரங்களையும் மறுக்கவோ அல்லது பிரசுரித்து இடையில் நிறுத்தவோ விளம்பர அதி பருக்குரிமையுண்டு.

விளம்பரங்கள் யாவும் வெ ள்ளிக்கிழமைக்கு முன்ன தாகக் காரியாலயத்திற் சேரக்கூடியதாக அனுப் பப்படவேண்டும்.

— விளம்பர அதிப

## 196-வது இலக்க புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

இத்தால் வியாபாரிகளுக்கும் பொதுஜனங்களுக்கும் அறிவிப் பது என்னவென்ருல் பெண் களின் உள் உடைகளாகிய வெஸ்ட்ஸ், நிக்கர்ஸ், பான்ரீஸ், இரா உடுப்புகளும், கால் மேசு வகைகளும், ஸ்ரொக்கிட்ஸ், லொக்நிட்ஸ் செயற்கைப் பட்டு களால் செய்யப்பட்டவையா ஞல் இவ் அறிவித்தல் வெளியா குந் திகதியிலிருந்து விலைக் கட்டுப்பாட்டு விதிகளினின்றும் தவிர்க்கப்பட்டுள்ளன. விலை அடையாளம் இடுவதினின்றும் தவிர்க்கக் கோரும் விண்ணப்பம் வழமை போல புறக்கோட்டை யிலுள்ள பங்கீட்டு உதவிக் கட்டுப்பாட்டதிகாரிக்குச் சமர்ப் பிக்க வேண்டும். அவ்வகை யான தவிர்ப்பு கொடுக்கப்படும் வரைக்கும் பொருள் வியாபா ரத்துக்கு வெளியில் வைத்திருக் கப்படவேண்டும்.

இப் பொருட்களுக்கு பெறப் படும் கிரயம் நியாயம் நீதி அற் றதாகக் காணப்பட்டால் விலை அடையாளம் இடுதலில் இருந்து தவிர்க்கப்பட்டிருப்பது மீட்டுக் கொள்ளப்படும்.

எம். எவ். டீ. எஸ். ஜயரட்ன
பதிற் புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 5-1-46 [2602]

## தருமவளர்ச்சிச் சங்கம் திருநெல்வேலி


இச்சங்கத்தின் பொதுக்கூட் டமொன்று தைப்பொங்கலன்று திங்கட்கிழமை (14-1-46) மாலை 6 மணியளவில் திருநெல்வேலி முத்துமாரி அம்மன் கோவில் மண்டபத்தில் நியாயதுரந்தரர் சோ. மகாதேவன் அவர்கள் தலைமையிற் கூடிற்று.

அத்தருணம் இணுவில் சுவாமி வடிவேல் அவர்கள் "மனிதன் உண்மைநிலை" என்ற விஷயத் தைப்பற்றியும், திரு. வ. கிருஷ் ணர் அவர்கள் "ஜனசக்தி" என் னும் விஷயம்பற்றியும் அரிய சொற்பொழிவுகள் செய்தார்கள். அத்துடன் பிரம்மஸ்ரீ மூர்த்தி ஐயர் கோஷ்டியாரால் புல்லாங் குழற் கச்சேரியும் நடாத்தப் பட்டது.

பின் ஆசிரியர். திரு. த. இரா ஜேந்திரன் அவர்களது குறிப் புரையுடன் 10 மணியளவிற் கூட்டம் இனிது முடிவடைந்தது.

—கடிதம்

நற்சுகத்திற்கு




எங்களிடம் P. S. R. சந்தனுதித் தைல வகைகளும் விற் பனைக் கிருக்கின்றன.

[2575]

## 26-வது இலக்க புடவைக் கட்டுப்பாட்டுக் கட்டளை

1945-இன் பாதுகாப்புப் பிரமாணங்களின் 20-வது புடவைக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்களின்படி எமக்குக் கொடுக்கப்பட்ட தத் துவங்களின் பிரகாரம் 7-வது புடவைக் கட்டுப்பாட்டுக் கட்டளையில் வெளிவந்த அட்டவணையில் பின்வரும் இனத்தையும் (அயிட்டம்) சேர்க்குமாறு கட்டளை இடுகின்றோம்

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| இலக்க வரிசை | வகை | வியாபாரி இல. | அளவு | சில்லறை வியாபார விலை |
| 137 | C.W. சாரங்கள் | 13 | 42"x2 யார் | ரூபா 2-00 |

எம். எவ். டீ எஸ். ஜயரட்ன
பதிற்புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 22-12-45. [2601]

## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை :**
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாதந் தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங் கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாஞல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என் னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கி யிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத் தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன் :**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிரூப்பர்

(2584)

# தேக புனிதத்திற்காக

— எந்தெந்தக் காலத்திலும்

தேகதுர்நாற்றம் (B. O.) உண்டாவதற் குக்காரணமானதும், தேகபுனிதத்தின் எதிரியுமான—கெட்ட வியர்வையிலி ருந்து சருமதுவாரங்களைக் காப்பாற்று வதற்காகவே லைவ்போய் டொயிலட் சோப்விசேஷமாகத்தயாரிக்கப்பட்டது




# லைவ்போய்

டொயிலெட் சோப்

LEVER BROTHERS (CEYLON) LIMITED

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்–மயிலிட்டிதெற்கு 'திருமகள் நிலயம்' நா. பொன்னையா அவர்களால், சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தில் 1946 ஜனவரி 20உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org